நீதி வென்றது; 'சதி' உடைந்தது

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 9—7—1978 | இதழ் 44



நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரனைக் கொலை செய்ய முயன்றதாகக் கழகத் தலைவர் கலைஞர், மற்றும் எஸ் ஏ. இராசமாணிக்கம், முன்னாள் அமைச்சர் கண்ணப்பன், ஜி. லட்சுமணன் எம். பி., கோபாலசாமி, செபாஸ்டியன் ஆகியோர் மீது அ. தி. மு. க. அரசு தொடுத்திருந்த வழக்கில் குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படவில்லை என நீதிபதி தீர்ப்பளித்து விட்டார்.

கழகத்தவர் மீது அடுக்கடுக்காகப் பொய் வழக்குகளைத் தொடுத்து வரும் எம்.ஜி.ஆர். ஆட்சியின் அநாகரிகப் போக்கிற்கு இந்தத் தீர்ப்பு மரண அடி கொடுத்திருக்கிறது.

தங்களைத் தட்டிக் கேட்கும் எதிர்க்கட்சியினர் மீது பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்தி, வழக்குகள் போடுவதன் மூலம் 'தாங்கள் ச புத்திரர்கள்' என்று காட்டிக் கொள்ள முனையும் ஆளுங்கட்சியினருக்கு சரியான பாடம் புகட்டியிருக்கிறது நீதி மன்றம்.

தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும்; தர்மம் மீண்டும் வெல்லும்' என்பதை 'தர்மபுத்திரர்' என்று தம்மைப் பறைசாற்றிக் கொள்ளும் எம். ஜி. ஆர். இப்போதாவது உணருவாரா?

நெருக்கடி நிலை இருந்த காலத்தில், அரசியல் நோக்கத்துடன் கழகத் தலைவர் மீது பழிசுமத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வழக்குத் தொடரப்பட்டது என்பதை நாடறியும்.

அ. தி. மு. க. ஆட்சி கழகத்தவர் மீது பொய் வழக்குள் போடுவதைக் கண்டிக்கும் வகையில் தி. மு. க, சார்பில் நாடெங்கும் ஜூலை 1, 2 ஆகிய நாட்களில் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

பொய் வழக்குகளைப் போட்டுக் கழகத்திற்குத் தொல்லை தருவதையே அ. தி. மு. க. அரசு தொடர்ந்து செய்து கொண்டிருக்குமானல் அடுத்த நடவடிக்கை என்ன என்பது பற்றி தி.மு. க. தலைமைச் செயற்குழு கூடி முடிவு செய்யும் என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னைப் பொதுக் கூட்டத்தில் இந்த அரசுக்கு எச்சரிக்கை விடவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

நெருக்கடி நிலை அகன்று நெடுநாளாகி விட்ட போதிலும் தமிழ் நாட்டை பொறுத்தவரை, நெருக்கடி நிலை தொடர்ந்து நீடிக்கிறதோ என்று ஐயுறும் வகையிலேயே அ.தி.மு.க. அரசு பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கோண்டு வருவதை தி. மு. க. மட்டுமல்லாது வேறு பல கட்சியினரும் அவ்வப்போது சுட்டிக் கட்டி வந்திருக்கின்றனர்.

பொய்யிலே பிறந்து பொய்யிலேயே வளர்ந்து பொய்யிலேயே பிழைத்து வரும் அ. தி. மு. க. அரசு இனியேனும், நிலைமையையும், விளைவுகளையும் உணர்ந்து, தனது போக்கை மாற்றிக் கொள்ளுமா என்பதைக் காலம் தான் சொல்ல வேண்டும்.

எதிர்க் கட்சியினர் மீது ஏதேனும் ஒரு பழியைத் தூக்கிப் போட்டு விட்டு, 'சட்டம் தன் கடமையைச் செய்யும்' என்பதும், விளக்கம் கேட்டால் 'காலம் வரும்போது சொல்லுவோம்' என்று வசனம் பேசுவதும் எம். ஜி. ஆர். அரசை எந்த நிலைக்குக் கொண்டு செல்லுமோ பொறுத்திருந்து பார்ப்போம்.

★

கண்ணப்பன்

எஸ். ஏ. இராசமணிக்கம்

இலட்சுமணன் எம். பி.


கோபாலசாமி


செபஸ்டியன்

அழகிரிக்கு அண்ணா சூட்டிய புகழாரம்!

சுயமரியாதை இயக்கத்தின் சுடர். தன்மதிப்பியக்கின் தனிப் பெருந் தளபதி. பார்ப்பனியத்தின் பகைவன். மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கும் முன்னணித் தலைவன்— வைதிகத்தின் வைரி— வர்ணாசிரமத்தின் விரோதி— சீர்திருத்தச் செம்மல்— சொற்செல்வன்— சோர்வற்ற உழைப்பாளி— தன்னலம் மறந்து, தன் நாட்டுக்குப் பணியாற்றிய பண்புடையோன்— அறிவுப் பாதையில் அங்கும் இங்கும் எங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறிவாளன்— அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றி வந்த ஆண்மையாளன்

"கல்லடியா— கவலைப் படாதே! சொல்லடியா— சோர்வடையாதே! பகைவரின் படையா— பயப் படாதே! எதிர்க் கட்சியினரா— ஏமாந்து விடாதே! சனாதனமா— அதில் சாய்ந்து விடாதே! சதியா— அதனைச் சாகடி! மதமா— அதனை மங்கவை! மாசுகளைத் துடை! மன்பதையின் மாணிக்கமாக விளங்கு— மரியாதையைப் பெறு! சுயமரியாதையைப் பெற்றுச் சுகவாழ்வு வாழ முற்படு! இதுவே உன்னுடைய குறிக்கோளாக இருக்க வேண்டும்'

என்று, எங்கு சென்றாலும் எக்காளமிட்டு— மூலை முடுக்கெல்லாம் முரசொலி கிளப்பி— தன்மான இயக்கத்தின் தலைவனாக விளங்கி— அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்த அழகிரிசாமியே நீயா மறைந்தாய்?

நின்னை மக்கள் மறந்தபோதிலும், நீ அவர்களை மறவாமல் அரும்பணியாற்றி வந்தனையே!

கைம்மாறு கருதாது கடமையைச் செய்த கர்மவீரனே— நீயா மறைந்தாய்?

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதை நடைமுறையில் செய்து காட்டிய செம்மலே— நீயா மறைந்தாய்? எதிர்ப்பையே விருந்தாகக் கொண்டு, எண்ணற்ற மக்களின் அறிவுக் கண்களைத் திறந்த ஏந்தலே— நீயா மறைந்தாய்? பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவனே— நீயா மறைந்தாய்?

தாயைப் பிரிந்த சேயைப் போல் தவித்து நின்ற தமிழ் மக்களின் தன்மானத்தைக் காக்க வந்த தளபதியே— நீயா மறைந்தாய்?

அந்தோ— அழகிரிசாமி— நீயா மறைந்தாய்? நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் செய்தி! மறக்க முடியாத சம்பவம்; மனதைக் குழப்பும் நிகழ்ச்சி!

தோழர் அழகிரிசாமி அவர்கள் சில காலமாகவே நோய்வாய்ப் பட்டுக் படுக்கையில் இருந்து வந்தார் என்ற போதிலும், இவ்வளவு திடீரென்று அவர் நம்மை விட்டுப் பிரிந்து— நம்மை எல்லாம் மீளாத் துயரத்துக்கு ஆளாக்குவார் என்று எதிர்பார்க்கவே இல்லை!

அவருக்கு ஏற்பட்ட நோய் நாளுக்கு நாள் குறைந்து வருவதாகவே செய்திகள் கிடைத்து வந்தன. அச்செய்திகள் நமக்கு ஆறுதல் அளித்து அழகிரிசாமி மீண்டும் நம்மிடையே வந்து தொண்டாற்றுவார்' என்ற நம்பிக்கையைத் தந்தன ஆனால் அந்த நம்பிக்கை, ஏக்கத்தையே பரிசாகத் தந்து விட்டது!

•28—3—1949-ல் தோழர் அழகிரிசாமி இயற்கையை எய்திவிட்டார்' என்ற திடுக்கிடும் செய்தி கிடைத்ததும் திகைத்துப் போனோம்!

திசைதவறி கப்பலிலுள்ள மக்கள் கரை காண முடியாது தவிக்கும் சமயத்தில் கப்பலின் பாய்மரம் ஒடிந்து விழக் கண்டால், எவ்வளவு பதைப்பரோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமான பதைப்பு தன்மானத் திசைக்கு வழிகாட்டியாக விளங்கிய அழகிரிசாமி என்னும் பகுத்தறிவுக் கப்பல், நோய் வாய்ப்பட்டிருந்து இயற்கை யெய்திவிட்டது.

என்ற நெஞ்சு திடுக்கிடும் செய்தியைக் கேள்விப் பட்டபோது ஏற்பட்டு— தமிழ் மக்களையெல்லாம் தத்தளிக்கச் செய்துவிட்டது.

தளராத உள்ளத்தோடு தமிழ்நாட்டுக்கு ஓயாது பணியாற்றி வந்த ஓர் உண்மையான உழைப்பாளி. அந்த உழைப்பின் பயனாகப் பெற்ற பரிசு உயிரைக் குடிக்கும் நோயாகவா, அந்தோ— அமையவேண்டும்.

கருத்தழிந்து கிடந்த மக்களின் கண்களைத் திறந்து கத்திக் கத்திக் கருத்துக் குவியலைக் கக்கியவருக்குக் காச நோயா பரிசாகக் கிடைக்க வேண்டும்!

•காச நோயைத் தீர்க்கக் காலா காலத்தில் காசு கிடைக்க வில்லையே என்ற கவலை— மேலும் அவருடைய நோய் வளர்வதற்கு வித்திட்டதுபோல் ஆகிவிட்டதே என்பதை நினைக்கும் போது ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதைப் பொதுவாக எல்லாரும் —குறிப்பாகச் சுயமரியாதை இயக்கம் எண்ணிப் பார்த்து வருந்தாமல் இருக்க முடியாது!

தோழர் அழகிரிசாமி அவர்கள் நோய் வாய்ப்பட்டு படுக்கையிலேயே இருக்கும் நிலைமை ஏற்பட்டபின், சென்னை சுயமரியாதை சங்கத்தார் ஒரு தொகையும வேறு சிற்சில ஊர்களிலிருந்து சிறுசிறு தொகையும் உதவி செய்யப்பட்டது. அது அவருடைய கடைசிக் காலத்தில் சிறிது ஆறுதலை அளித்தது என்ற போதிலும் அவரை நம்பி வாழ்ந்த அவருடைய குடும்பம் இனி எப்படி வாழ்க்கை நடத்தும் என்பதையாவது அவருடைய ஒப்பற்ற சேவையால் உருவான பயனைக் கண்ட அனைவரும் எண்ணிப் பார்த்து ஆவன செய்ய வேண்டும் என்பதே எமது மனப்பூர்வமான விருப்பம் கேண்டுகோளுமாகும்.

மறைந்த மாவீரரின் மனைவியும்— மூன்று புதல்விகளும்— இரண்டு புதல்வர்களும்— வயது முதிர்ந்த தாயாரும்— தமிழ்நாட்டின்— தன்மான இயக்கத்தின் உதவியையே எதிர்பார்த்து நிற்கின்றனர். தங்கள் குடும்பத் தலைவன் மறைந்ததால் ஏற்பட்டுள்ள குமுறலோடு வறுமையும் சேர்ந்து அவர்களை வாட்டி வதைத்து, மேலும் கொடுமைப் படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; இதுவே நாம், அவருக்கு ஆற்ற மறந்த கடமைக்குக் கழுவாயாகும்.

அவரது பிரிவால் வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும்— மற்றும் தன்மான இயக்கத் தோழர்களுக்கும்— நமது கட்டுக்கடங்காத ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்து ஆறுதல் கூறுகிறோம்.

—அறிஞர் அண்ணா

3—4—49 திராவிட நாடு இதழில் எழுதியது

கோயில்களில் முடங்கியுள்ள தங்கம்!

இந்திய அரசு கொண்டு வந்த தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு ஒத்துழைக்கப் பல கோயில்கள் மறுத்துவிட்டன. கோயிலில் உள்ள சொத்துக்களெல்லாம் கடவுளுக்குச் சொந்தமானவை என அவைகள் வாதிட்டன.

1971-ஆம் ஆண்டில், மத நிறுவனங்கள் தெரிவித்த கணக்குப்படி, கோயில்களில் முடங்கியுள்ள தங்கத்தின் அளவு மட்டும் 1400 டன்களாகும்.

1976-ஆம் ஆண்டில் திருப்பதி தேவஸ்தானம் 538 கிலோ கிராம் தங்கத்தை விற்பனை செய்தது. அதற்கு அடுத்த ஆண்டு சுமார் 105 கிலோ கிராம் தங்கத்தை விற்றது.

—தகவல்
இல்லஸ்ட்ரேட்டடு வீக்லி.

ஏஜெண்டுகள் கவனிக்க

10-7-78-க்குள் பட்டியல் தொகையினை அனுப்பாதவர்களுக்கு 16—7—78-ந்தேதிய இதழ் அனுப்பப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி

தெரிந்தவர்களையாவது கேட்கக் கூடாதா?

எம். ஜி. ஆர். தனது அறிக்கையில் "1938- ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே அழகிரிசாமி சிறைச்சாலைக்குச் சென்றார்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அழகிரி சிறைச்சாலைக்குப் பயந்தவரல்ல. ஆனால் 1938-ம் ஆண்டு அவர் சிறைச்சாலைக்குச் சென்றவர் அல்ல.

சொல்வதை ஒழுங்காகச் சொல்ல வேண்டும். தெரியாவிட்டால் தெரிந்தவர்களைக் கேட்டாவது சொல்லவேண்டும்.

அந்தப் போராட்டத்தில் அண்ணன் அழகிரி அவர்கள் திருச்சியில் இருந்து சென்னை வரை படை நடத்திச் சென்றாரே தவிர அவர் கைது செய்யப்படவில்லை. சிறைச்சாலைக்குச் செல்லவில்லை. ஏழு எட்டு ஆண்டுக்காலம் கழித்து வேறு ஒரு காரணத்திற்காக பெரியார் அவர்களுடைய வீட்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் பெரியார், அண்ணா, அழகிரி உட்பட ஏறத்தாழ 90 பேர் சிறைப் பிடிக்கப்பட்டார்கள். அப்பொழுதுதான் சிறை சென்றார்.

ஆனால் 1938-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் அவர் சிறை செல்லவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

—கலைஞர்

அஞ்சா நெஞ்சம் வடித்த அஞ்சா நெஞ்சன் சிலை!

—பட்டுக்கோட்டை என். நடராசன் பி. ஏ., பி. எல்.,—

மூடநாற்றமெடுத்த மூட நம்பிக்கைகளிலே மூழ்கிக் கிடந்து அறியாமை இருளில் அவதியுற்றவர்களிடையே ஆதவனாய் வந்த "அஞ்சா நெஞ்சன் அழகிரிக்கோர் சிலை' அந்தப் பட்டுக்கோட்டையிலே.

இடறி விழுந்து எங்கோ ஓடியவர்களை ஈரோட்டுப் பாதையிலே சேர்த்திட இரவு பகல் பாராது, இரத்த வாந்தி எடுத்திட சாலை ஓரத்திலும், சாமியார் மடத்திலும், பள்ளி அருகிலும், பட்டுக்கோட்டை நகரெங்கிலும் பட்டி தொட்டி எங்கும் ஒலி பெருக்கி இல்லாது உரத்தக் குரலில் கொள்கை விளக்கமளித்த அந்த அஞ்சா நெஞ்சனின் சிலையை அஞ்சா நெஞ்சரான கலைஞர் திறந்து வைத்துள்ளார்!

சீனத்திலே ஒலித்த சன்யாட்சென் கருத்துக்கள் சிந்தையைத்தட்டி எழுப்பியதைப் போல் கரிபால்டியின் கருத்துக்கள் கணக்கற்ற இத்தாலியரை கருத்தாழத்தால் கவர்ந்ததைப் போல, தந்தை பெரியாரின் சமூகச்சீர்திருத்த கருத்துக்களை அழுத்தந்திருத்தமாக ஆணித்தரமாக, அயர்ந்து தூங்குகிறவன் கன்னத்திலே வேகமாக அறைந்ததும் ஏற்படுத்துகின்ற விழிப்புணர்ச்சியைப் போல், அதட்டுகின்ற குரலில் ஆழப்பதிய வைத்தவர் அழகிரியார். அழகான உவமைகள்! உதாரணத்திற்கு ஒன்று சொன்னால் மூட நம்பிக்கையிலே ஊறி நடக்க முடியாததை எண்ணி ஏங்கும் கருத்துக் குருடர்களுக்கோர் உதாரணமாக அவர் சொல்வது "கடல் வற்றிக் கருவாடு சாப்பிட எண்ணிக் குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு" இத்தகைய எளியதாயும் எப்போதும் மறக்க இயலாததுமான உவமை அவருக்குக் கைவந்த கலை

சனாதனக் கருத்துக்களை சாடும்போதும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை எதிர்க்கும் அப்போதைய சில சமுதாயத்துப் பெரும்புள்ளிகளை எதிர்த்த நேரத்திலும் அவரது சொல்லின் வேகம் ஆயிரம் வாட் மின்சக்தி! ஆயிரக்கணக்கான அடி உயரத்திலிருந்து விழும் நயாகரா நீர் வீழ்ச்சி அகன்று விரிந்த கொள்ளிடம்! கோயில் மத்தியிலே உட்கார்ந்து கொண்டு கோயில் பூசாரிகளிடமே பகுத்தறிவுக் கருத்தை மெல்ல மெல்ல உணர்த்தி, கொள்கை வழியால் இழுத்து அவர்களைத் திருவிழா நடத்த முடியாதபடி மாற்றுகின்ற ஆற்றல் அவரது முத்திரை பொதித்த தனித் தன்மை.

உடல்நலமில்லாத நிலையில் சளியும் ரத்தமுமாகக் கக்குகின்ற வேளையிலும் மேடையேறி கனல் தெறிக்கப் பேசுகின்ற வீர உணர்வுகளில் அவர் ஒரு பாஞ்சாலங்குறிச்சி. பகுத்தறிவுக்கருத்தைச்சொல்பவன் பைத்தியக்காரனுக்குப் பட்ட ஆரம்ப காலக்கட்டத்திலே பணக்காரர்களின் பகைவர்களாகக் கருதப்பட்டு அவர்களால் ஏவிவிடப்பட்ட எடுபிடிகளை எதிர்க்கும் ஆற்றலிலே அவர் ஓர் இமாலயச் சிகரம்.

அத்தகைய அஞ்சா நெஞ்சனுக்கோர் சிலை. அதைத் திறந்து வைக்க மட்டுமல்ல; அந்தச் சிலை வடிப்பதைக் கூட கலைஞர் அவர்கள் தாம் நேரிலே பார்வையிட்டு அதற்கு ஒப்புதல் அளித்த பின்புதான் வடிவாக்கப்பட்ட வேண்டுமென்றும் அந்தச் சிலைத்திறப்புச் செலவுக்கு தன்னுடைய நிகழ்ச்சிமூலம் கிடைத்த பணத்தைக்கொடுத்துதவுகிறார் என்றால் அதில் தவறு காண முடியாத தகுதியிருக்கிறது. ஆழம் காண முடியாத பொருளிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அந்தச் சிலையைத் திறக்க அவருக்கே அருகதையிருக்கிறது,

வீரத்தின் விளைநிலம் வைர நெஞ்சமுடைய வரலாற்றின் வைரவரி அஞ்சா நெஞ்சன் அழகிரியின் பெயர் தன் நெஞ்சை விட்டு அகலக் கூடாது என்பதற்காக தன் அருமை மகனுக்கு அந்தப் பெயர் சூட்டி, அந்தமகனுக்குக் கொள்கையைக் கொலுவேற்றும் வகையில் கலப்பு மணம் செய்துவைத்து அழகிரிமேல் உள்ள அன்பை வெளிப்படுத்துகின்ற தமிழினத் தலைவர் கலைஞர் திறக்கிறார் சிலையென்றால் அதிலே அளவிடமுடியாத தகுதியிருக்கிறது;

தமிழுக்கோர் இன்னல் எனும்போது தமிழன்வாழ்வா சவா என்று வீர மரணப் போராட்டத்திலே ஈடுபட்டபோது எட்டுப் பேர் இன்னமுதத் தமிழுக்காகத் தம்முடலை எரியூட்டிக் கொண்ட போது கோவாவில் காதல் கீதம்பாடியவர்களும், அவசரச் சட்டம் சரிஎன்று ஆமாம்சாமிபோட்டு அடிமைத்தனத்திற்கு ஆரத்தி எடுத்தவர்களும் அழகிரியின் பெயரைச் சொல்லுகிறார்கள் என்றால் அது சொந்த லாபத்திற்குத்தான் என இனம் கண்டுகொள்ளாதவர்கள் இந்த மண்ணிலே எங்குமிருக்கமாட்டார்கள்

அடுக்கடுக்கான பொய் வழக்குகளை கழகத் தலைவரும்' கழக உடன்பிறப்புக்களும் சந்தித்து வரும் இவ் வேளையிலே கழகத்தின் சார்பில் அழகிரியார் சிலை திறக்கப்படுவதிலே பொருளுமிருக்கிறது; பொருத்தமும் இருக்கிறது.

அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகளைப் பிரிந்தும் அடுக்கடுக்காய் வரும் அத்துணை சோதனைகளையும் இடைவிடாது வரும் எத்தனையோ இன்னல்களையும் தாண்டி இன்முகக் தோடு தலைவர் கோடிக் கணக்கானவர்கள் இதயத்திலே கொலுவீற்றிருக்கிறார் என்றால் அதற்குக்காரணம் ஓர் அருமருந்து. அந்த அருமருந்து தான் அழகிரியின் நினைவு. வீரனை நினைத்ததும் எழும் வீரம் அதன் துணைக்கொண்டு தான் துன்பத்திற்குத் துன்பம் விளைவிக்கும் துணிவு பெறுகிறார் என்றால் அது துளியும் தவறுகாது.

அத்தகைய அருமருந்து அவருக்கு மட்டுமல்ல; தனது அருமை உடன்பிறப்புக்களுக்கும் தேவை என்பதை உணர்ந்துதான் அந்த அஞ்சா நெஞ்சன் அழகிரி தொட்டில் பருவம் முதல் துயில்கொண்ட காலம்வரை பழகிக் களித்த பார்த்து மகிழ்ந்த, பகுத்தறிவுக் கொள்கைகளைப் பாடித்திரிந்த பட்டுக்கோட்டையிலே சிலை வைத்து அதன் மூலம் தூங்கும் மனிதர்களையும் துவண்ட இதயங்களையும் தோள் தட்டி எழுப்புகிறார்.

அந்தச் சிலை தமிழரின் சீரிய வரலாற்றில் சிறப்பு இடம் பெறட்டும். அந்தச் சிலை இருக்கும் நாள்வரை மக்கள் சிந்தனையைக் கிளறட்டும். அந்தச் சிந்தனையின் எழுச்சியிலே பகுத்தறிவுக் கொள்கைகள் பாரெங்கும் தழைக்கட்டும்.

எது நல்ல தீர்ப்பு?

தீர்ப்பு என்றால் பலவிதம் உண்டு. ஆண்டவன் அடியார்க்கு அளிக்கும் தீர்ப்பு ஒருவிதம்; அரசன் குடிகட்கு அளிக்கும் தீர்ப்பு மற்றொரு விதம்; சட்டசபை தீர்ப்பு ஒரு தன்மையது; வலியோர் எளியோர்க்கும் முதலாளிகள் தொழிலாளிக்கும் அளிக்கும் தீர்ப்பு பிறிதொரு தன்மையது. இவையாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர். ஆனால் தீர்ப்பு காலத்திற்குத் தக்கவாறும், நிலைமைக்குத்தக்கவாறும்மாறும். மாறித்தான் தீரும்; மாறித்தான் தீரவேண்டும். ஒரு காலத்திலே நல்ல தீர்ப்பாக விளங்கியது. பிறிதொரு காலத்திலே நல்ல தீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.

நம் நாட்டிலே பசுவின் கன்றைக் கொன்ற மகனைத் தேர்க்காலிலே வைத்து மடித்தான் மனு நீதி கண்ட சோழன். இது அவனுக்கு; அவனது கருத்துக்கு; அக்கால நிலைமைக்கு ஏற்றபடி நல்ல தீர்ப்பு. ஆனால் அவ்விதம் செய்ய இக்காலத் தந்தையர்கள்; தாய்மார்கள் சகோதர சகோதரிகள் ஒருப்படுவார்களா? அந்தக் காலத்து நல்ல தீர்ப்பு இந்தக் காலத்திற்குப் பொருந்துமா?

கிரேக்க நாட்டிலே, பகுத்தறிவாளன் சாக்ரடீஸ் நாட்டிலே பகுத்தறிவை வளர்த்தான்; மக்கள், நாட்டின் சாதாரண மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும்; அழகு, சத்தியம், ஆண்டவன் முதலியவைகளைப் பற்றி ஒருவித உணர்ச்சியை எழுப்பி உண்மையை உள்ளபடி உணர ஊக்கினன். ஆனால் அக்கால உலகம் அவனுக்கு அளித்த தீர்ப்பு; அவனை சிறையிலே அடைத்து, சிந்தனையைச்சிதைக்கமுயன்றது. நஞ்சை நாவால் சுவைக்க வைத்து நமனுலகுக்கு அனுப்பியது இதுவும் அப்போது 'நல்ல' தீர்ப்புதான்.

இங்கிலாந்திலேசுதந்திரத்தைநாடிஉழைத்த பொய்பிஷியா என்னும் மாதை உரோமானியர் மகாக்கொடுமைப் படுத்தினர். அது அவர்களுக்கு அப்போது நல்ல தீர்ப்பே.

அரசனின் தெய்வீக உரிமை கொண்டாடிய சார்லஸ் மன்னன் தன் அரண்மனை முன்னிலையிலேயே தூக்கிலிடப்பட்டான். இதுவும் ஒரு 'நல்ல தீர்ப்பே.'

பிரான்சிலோ நாட்டு மக்களை அடைக்க உதவிய (பாஸ்டிலி)சிறையை வீழ்த்தி, புரட்சியைப் போற்றி நாட்டோர் நன்மையை நாடி; சீமான்களையும், பூமான்களையும் அதே பாஸ்டிலி சிறையில் அடைத்தோரை அந்நாடு தூக்கிலிட்டு 'நல்ல தீர்ப்பு' செய்தது. அது ஒருகாலம்.

ஆனால் ரஷ்யாவிலோ மன்னன் முதல் மடாதிபதிகள் வரை மக்கள் நலனுக்கு மாறானோரை மட்டந்தட்டிச் சுட்டு வீழ்த்தி நாட்டிலேசமத்துவத்தை நிலைநாட்டிய புரட்சி வீரர்களைப் போற்றாதார் யார்? இது இக்காலத்துக் கேற்ற ஒரு 'நல்ல தீர்ப்'பென அவர்கள் கருதுகின்றனர்.

நான் மறுமுறையும் கூறுகிறேன்; தீர்ப்பானது காலத்தையும் தீர்ப்பளிப்போரின் தன்மையையும் தழுவியதாகவே இருக்கும். சமுதாயத்திற்குநன்மைபயக்குப் தீர்ப்பு எதுவானாலும் அதுதான் நல்ல தீர்ப்பு; நல்ல தீர்ப்பு நல்லவர்கள் செய்யும் தீர்ப்பாக என்றும் இருக்காது. ஏனெனில் நல்லவர்கள் தீர்ப்பு, என்றுமே இரக்முடையதாகவே இருக்கும்.

— பேரறிஞர் அண்ணா.

('நல்ல தீர்ப்பு' நூலிலிருந்து)

புருஷன்

தென்னரசு

(8)

பொன்னையாவுக்கு அப்போது வயது இருபத்தைந்து இருக்கும். திருநெல்வேலி மாவட்டத்திலிலுள்ள ஒருஜங்ஷனில் போர்ட்டராக வேலை பார்த்துக் கொண்டிருந்தான். வாடிக்கையான பிரயாணிகள் அவனைப் 'புலிக்குட்டி' என்று தான் அழைப்பார்கள். கொஞ்சம் வாயாடி. கோபம் வந்துவிட்டால் எதிரியைக் கண், மூக்குத் தெரியாமல் அடித்துப் போட்டுவிடுவான். பேசினாலும் அப்படித்தான், தலைமுறைக்குத் தலைமுறை சாடுவான்! வேலையில் சேர்ந்ததிலிருந்து பொன்னையா அதே ஜங்ஷனில்தான் வேலை பார்த்தான். வெள்ளைக்காரன் காலத்திலே அந்த ஸ்டேஷன் ஜங்ஷன் ஆனது. ஆனால் அது, ஜங்ஷன் ஆகக்கூடிய அந்தஸ்து இல்லாத ஊர், இரவில் வரும் பிரயாணிகளுக்கு அங்கேபாது காப்புக்குஉத்திரவாதம்இல்லை. ஜங்ஷனிலிருந்து மூன்று மைல் தூரத்தில் ஒரு கிராமம் இருக்கிறது அந்த கிராமத்தின் பெயர்தான் ஜங்ஷனுக்கும்! ஜங்ஷனில் வேலை பார்க்கும் அதிகாரிகளெல்லாம் ஓய்வு நாட்களில் அந்தக்கிராமத்தில் தான் பொழுதைப் போக்க வேண்டும். பெரிய அதிகாரிகள் அந்த ஊர் ஜமீன்தார் காளீஸ்வர மூர்த்தி வீட்டில்தான் களியாட்டத்தில் ஈடுபட்டிருப்பார்கள். காளீஸ்வர மூர்த்தி மிதமிஞ்சிய மைனர் விளையாட்டுக்காரர். தன்னுடைய பங்களாவை பாரீஸ் பட்டணத்து ஹோட்டலைப் போல் மாற்றவேண்டும்என்று அடிக்கடி நண்பர்களிடம் சொல்லுவார்.

ரயில்வே அதிகாரிகளுக்கெல்லாம் அவரது அரண்மனை இலவசமான உணவு விடுதியாகவும், உல்லாசம் தரும் மாளிகையாகவும் இருந்து உதவி வந்தது.

அது ஒரு விநோதமான ஜங்ஷன். பகலைவிட இரவில்தான் அங்கு ரயில்கள் அதிகமாக வந்து நிற்கும். சென்னையிலிருந்து வரும் வண்டி, செங்கோட்டையிலிருந்து வரும் வண்டி—இரண்டும் அங்கே சந்திக்கும். திருநெல்வேலிக்குப் போவோரும் தூத்துக்குடிக்குப் போவோரும் அங்கேதான் வண்டி மாற வேண்டும்.

ஒரு நாள் இரவு சென்னையிலிருந்து வந்த வண்டியை ஜங்ஷனுக்கு மூன்று மைல் தூரத்திற்கப்பால் யாரோ அபாயச் சங்கிலியை இழுத்து நிறுத்திவிட்டார்கள். தூங்கிக் கொண்டிருந்த பிரயாணிகளெல்லாம் உருண்டு விழுந்தார்கள் வண்டி நின்றதும். டுமில்! டுமில்! என்று துப்பாக்கிச் சத்தம் கேட்டது. பிரயாணிகளெல்லாம் பயந்து நடுங்கி இறங்கி ஓடினார்கள் திட்டமிட்டிருந்தபடி கொள்ளைக் கூட்டத்தினர் ரயிலிலிருந்த துணிமூட்டைகள் பெண்களின் ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் கொள்ளையிட்டுக்கொண்டு ஓடிவிட்டனர் இந்த ரயில் கொள்ளை அந்தப் பிராந்தியத்தில் பெரும் பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அதனால் ரயில்வேயில் வசூல் குறைந்துவிட்டது

கொள்ளை நடந்த இடம். விதம் எல்லாவற்றையும் போலீசார்துப்புவிசாரணையி போது ஒரு பெண் "கொள்ளைக் கூட்டத்தினர் அனைவரும் ரயில்வே போர்ட்டர்களைப் போல் நீலச் சட்டையும், சிவப்பு தலைப்பாகையும் அணிந்திருந்தார்கள்." என்றாள். போலீசாருக்கு ஒரு கொம்பு கிடைத்துவிட்டது. போர்ட்டர்களையெல்லாம் வரிசைப் படுத்தி விசாரித்தார்கள். மிரட்டினார்கள் பலன் கிடைக்கவில்லை.

பெரிய போலீஸ் அதிகாரி வந்தார். "இது மாதிரிக் கொள்ளைகளை அனுமதிப்பது ரயில்வே இலாகாவுக்கே கேவலம்; போர்ட்டர்கள் உத்தியோகத்திற்கே ஒரு களங்கம். இந்தக் கொள்ளைக் கூட்டத்தினரை எப்படியாவது கண்டு பிடித்து அவமானத்தைத் துடைத்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு இங்கே உள்ள போர்ட்டர்களுடையது"என்று அவர் கடமையை உணர்த்தினார்.

பொன்னையாவுக்கு மனம் சுட்டது. எப்படியாவது கொள்ளைக் கூட்டத்தைக் கண்டு பிடித்து விடுவது என்று அவன் கங்கணம் கட்டிக்கொண்டான். அவனது சக ஊழியர்களும் அதற்குத் துணைபுரியச் சம்மதித்தார்கள். அன்றிலிருந்து ஓய்வில்லாமலே அலைந்தான் பொன்னையா.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் பொன்னையாவுக்கு ஒரு தகவல் கிடைத்தது அடுத்த வாரம் தீபாவளிச் சரக்குகளை ஏற்றிவரும் இரவு வண்டியைக் கொள்ளைக் கூட்டம் சூறையாடப்போவதாக அவன் அறிந்தான். பொன்னையா அன்றைய தினம் மாலை ஆறு மணிக்கே பத்து மைல்களுக்கு முன்னால் உள்ள கடம்பூர் ஸ்டேஷனுக்குவந்துகுறிப்பிட்ட ரயிலில் போக ஏற்பாடு செய்துகொண்டான்

வண்டி அந்த ஸ்டேஷனை விட்டுப் புறப்படும்போது மணி பன்னிரண்டு! பொன்னையா எஞ்சின் டிரைவருக்கு அருகில் நின்று கொண்டே போனான். அவன் கையில் ஆயுதங்கள் இருந்தன.

வண்டி ஒரு சிறிய ஓடை மீது போய்க்கொண்டிருக்கும் போது சிலர் ரயில்வே ஊழியர்களின் உடையுடன்சிவப்புக் கொடியை காட்டினார்கள். டிரைவர் வண்டியை நிறுத்த முயன்றார். பொன்னையா பெருங்கூச்சல் போட்டான். "வண்டியை நிறுத்தாதீர்கள் அது கொள்ளைக்கூட்டம்" என்றான்.

"அதை எப்படி நான் நம்புவது? நான் நிறுத்தாவிடில் எனக்குக் கேள்வி வரும். ரயில்வே உடையில் கொடி காண்பிக்கும்போது வண்டியை நிறுத்தாமல் இருக்கலாமா?" என்றான் டிரைவர்.

கொடிக்காரன் கொடியை அசைத்தான். பலமாக அசைத்தான்.

வண்டி நின்றது! டிரைவர் இறங்கினார். அதற்குள்ளாகப் பெட்டிகளில் ஓலம் கிளம்பிவிட்டது பெண்கள் கதறினார்கள். கொள்ளைக்கூட்டத்தினர் பொருட்களைப் பந்தாடினார்கள். பொன்னையா தனி ஒருவனாக நின்று போராடினான். கொள்ளைக்கூட்டத்தின் தலைவனைத் தவிர மற்றவர்களெல்லாம் ஓடிவிட்டார்கள் பொன்னையாவுக்கும் அவனுக்கும் பெரும்போர் நடந்தது கொள்ளைக்கூட்டத் தலைவனின் முகமூடியைக்கிழித்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று உக்கிரமாகச் சண்டை போட்டான் பொன்னையா! கடைசியாக முகத்திரையையும் கிழித்தும் விட்டான்! அவனுக்கு திகிலாகிவிட்டது. ஆம்; அந்த ஊர் ஜமீன்தார்தான் கொள்ளைக்கூட்டத் தலைவன் ஜமீன்தார் துப்பாக்கியை எடுத்தார் பொன்னையாஒளிந்தான் அவனிடம் கத்தியும் கம்பும் தான் இருந்தன துப்பாக்கியைப்போல் எட்டி நின்று பொருதக்கூடிய ஆயுதம் அவனிடமில்லை பொன்னையா ஊரைத்திரட்ட ஓடினான் அதற்குள் பொழுது விடிந்து விட்டது

மறுநாள் காலை கொள்ளை நடந்த இடத்திற்குப் போலீஸ் பட்டாளம் விரைந்தது அந்த இடத்தில் கரன்சி நோட்டுக்கள் சிதறிக்கிடந்தன எந்தப் பாதை வழியாகப் பொன்னையா தப்பியோடி வந்தானோ அந்த வழி முழுவதும் கரன்சி நோட்டுக்கள் தூவிக்கிடந்தன போலீசார் நோட்டுக்களைப் பொறுக்கிக் கொண்டே போனார்கள். கொஞ்ச தூரம் தான் போயிருப்பார்கள் அதற்குள்ளாக ஒரு போலீஸ்காரன் ஓடிவந்து திடுக்கிடும் தகவல் ஒன்றைச் சொன்னான் செய்தியைக் கேட்ட போலீஸ் அதிகாரி 'சுட்டுக்கொல்லப்பட்ட பிணம் கிடக்கிறதா?' என்று வியப்புடன் கேட்டார். எல்லோரும் அந்த இடத்திற்குப் போனார்கள் அங்கே ஒரு பிணம் செல்வந்தர் உடுப்பணிந்து கிடந்தது அதுவேறு யாருமல்ல ஜமீன்தார்தான்! சப்-இன்ஸ்பெக்டருக்கு குழப்பம் வந்துவிட்டது.

"என்னப்பா பொன்னையா ஜமீன்தார்தான் கொள்ளைக் கூட்டத்தின் தலைவர் என்றால் அவரே இறந்து கிடக்கிறாரே!" என்று கேட்டார் சப்-இன்ஸ்பெக்டர்.

'நான் சொல்லுவதுதான் உண்மை' என்றான் பொன்னையா. அதற்குள்ளாக இன்னொரு போலீஸ்காரன் ஓடிவந்து ஓடையினடியில் ஏதோ ஒரு பொட்டலம் இருக்கிறது' என்றான். இன்ஸ்பெக்டர் அதைப் பரிசீலித்தார். அது பொன்னையாவின் போர்ட்டர் உடை! இன்ஸ்பெக்டருக்கு பொன்னையாவின் மீது சந்தேகம் வலுத்தது. பொன்னையா மன்றாடினான். பயனில்லை. வழக்கு பொன்னையா பக்கம் திரும்பி எதிர்த்துவிட்டது,

போலீசாருக்குச் சாட்சியங்களா கிடைக்காது! பரமசிவனே பூலோகம் வந்து பட்டைச் சாராயம் குடித்தார் என்று ஒரு வழக்கு வந்தால் அதற்கும் நாலு சாட்சியங்களைப் பிடித்துவிடுவார்களே, நமது போலீசார்! கொலை, கொள்ளை வழக்குகளுக்கா அவர்களுக்கு சாட்சிகள் கிடைக்கமாட்டார்கள்?

'பொன்னையாதான் தொடர்ந்து ரயில் கொள்ளை நடத்தி வந்திருக்கிறான்; கொள்ளையைத் தடுக்கமுயன்ற ஜமீன்தாரை அவன் ஒரு கள்ளத் துப்பாக்கியால் சுட்டுப் போட்டுவிட்டு அதுதற்கொலை என்று கருதும்படி, துப்பாக்கியை அந்த இடத்திலேயே போட்டுவிட்டுப் போய்விட்டான் கொள்ளைநடந்த அன்று பொன்னையாவை பத்து மைல்களுக்கு முந்திய ஸ்டேஷன்களிலெல்லாம் பலர் பார்த்ததற்கு சாட்சியங்கள் இருக்கின்றன. ரயில்வே அதிகாரிகளே சொல்லி இருக்கிறார்கள். மேலும் அவன் முன்பே போர்ட்டர் உடைகளைபாலத்தடியில் ஒளித்துவைத்திருக்கிறான் கொள்ளை அடித்துவிட்டு போர்ட்டரைப்போல் தப்பித்துக் கொள்ளவோ. அல்லது ரயில்வே ஊழியரைப் போல் நின்ற வண்டியை நிறுத்தவோ அந்த உடையை அவன் பயன்படுத்தித் தப்பிக்கத் திட்டமிட்டிருக்கிறான்.' என்று கூறிய நீதிபதி பொன்னையாவுக்கு இருபது வருடக் கடுங்காவல் தண்டனை கொடுத்துவிட்டார்

கல்யாணமாகாத இளைஞன் பொன்னையா ரயிலில் கூலி சுமந்து தன் வயிற்றைக் கழுவி தாயில்லாப் பிள்ளையான தன் தங்கையின் உயிரையும் காப்பாற்றி வந்தான். அவன் நீதிமன்றத்திலிருந்து வெளியேறி தன் தங்கையையாரிடம்பிடித்துக் கொடுப்பது என்று தெரியாமல் திகைத்தான. சுற்றி இருந்தவர்கள் எல்லோரும் எதிரிகளாகத் தெரிந்தார்கள் அவனது சக தோழர்கள் கூட பொன்னையா கொள்ளைக்காரன்தான் என்று எண்ணிவிட்டார்களே!

"போலீஸ் வாகனம் நகர்ந்தது. "புத்தியோடு பிழைத்துக் கொள்!' என்று பொன்னையா அந்தச் சிறுமியிடம் சொன்னானே தவிர யாரிடம் போய்ப் பிழைக்கச் சொன்னான்? எப்படிப் பிழைக்கச் சொன்னான்' அந்தச் சிறுமிக்கும் தெரியவில்லை. அந்தச் சிறுமி வண்டியைத் தொடர்ந்து கதறி ஓடிவந்தாள் கொஞ்சதூரம்தான் அவள் உருவம் பொன்னையாவுக்குத் தெரிந்தது. அதற்குள் மண்புகைதிரையிட்டுவிட்டது

மொத்தம் பதினைந்தாண்டுகள் பொன்னையா சிறையிலிருந்து விட்டு விடுதலையானான். இளைஞனாகப்போய்க்கிழவனாக வெளியில் வந்தான். வந்ததும் அந்த ஊருக்குப் போனான். ஊரே மாறிப்போயிருந்தது. அவன் வைத்த வேப்பங்கன்று மரமாகி நிழல் தந்துகொண்டிருந்தது தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோருமே ஒரேமாதிரியாகத்தான் அவனைப் பார்த்தார்கள். பொன்னையா அதற்காகவெட்கப்படவில்லை தலைநிமிர்ந்துதான் நடந்தான். அவன் ஏன் வெட்கப்படவேண்டும்!

பொன்னையாசிறைபுகுமுன் நகரில் பட்டாணிக்கடலை விற்றுக்கொண்டிருந்த பாமா,குடியும் குடித்தனமுமாய் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் வெற்

(9-ம் பக்கம் பார்க்க)

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கிடைக்குமிடம்: "போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.

நெஞ்சில் நிறைந்தவர்கள்!

அஞ்சா நெஞ்சன்

"நான் கலந்து கொண்டு பேசும் கடைசி நிகழ்ச்சி இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். என்னுடைய உடல் நிலை இனிப் பேசுவதற்கு இடம் தரும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எனவே, உங்கள் அனைவரிடமும் கடைசியாக விடைபெற்றுக் கொள்கிறேன்."

இதயத்தை உலுக்கும் இந்த வாசகங்களைக் கேட்டு அதிர்ச்சியால் துணுக்குற்றவர்கள்—ஓவென்று அழுதவர்கள் பலர்.

1948-ஆம் ஆண்டு ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களால் கூட்டப்பட்ட திராவிடர் கழகத் தனி (ஸ்பெஷல்) மாநிலமாநாட்டில், அஞ்சா நெஞ்சன் அழகிரி ஆற்றிய உரையின் கடைசி வரிகளே அனைவரையும் கண்ணீர் வடிக்கச் செய்த அந்த வாசகங்கள்!

ஆம்! அதுவே அழகிரிக்குக் கடைசி நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. அதன் பிறகு அவர் எந்த மேடையிலும் ஏறவேயில்லை; மரண மேடைதான் அவரை அணைத்துக் கொண்டது

அழகிரி மறைந்து முப்பதாண்டுகளுக்குப் பிறகு. அவர் வாழ்ந்த பட்டுக்கோட்டையில், அவருக்குச் சிலை நிறுவப்பட்டு, அதனைத் திறந்து வைக்க எல்லாவகையிலும் பொருத்தமும் தகுதியும் வாய்ந்த தலைவர் யாரோ அந்தத் தலைவர்—கலைஞர் அவர்கள்—தமது திருக்கரங்களால் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது

அழகிரியின சிலையைக் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கின்ற அதே நாளில், இன்னொரு முகாமிலிருந்து ஒரு திடீர் அறிவிப்பு வெளியாயிற்று' அதே பட்டுக்கோட்டையில், அழகிரிக்கு இன்னொரு சிலை திறக்கப்படும் என்பதுதான் அந்த அறிவிப்பு.

இந்த அறிவிப்பின் உட்பொருளை உணர்ந்து கொள்ள முடியாத எவரும் இருக்க முடியாது எப்படியிருப்பினும் அழகிரிக்கு இன்னொரு சிலை எடுக்கபபடுவது கண்டு நமக்கு எவ்விதக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. இரட்டிப்பு மகிழ்ச்சியே என்பதை, கலைஞர் அவர்களே. தெரிவித்து விட்டார்கள்.

அழகிரியை நேரில் கண்டவர்களும், அவரது பேச்சைக் கேட்டவர்களும் முப்பதாண்டுக்கு முன் (திராவிடர் கழகமாக இருந்த காலத்தில்) நமது இயக்கத்தில் இருந்தவர்களாகத்தான் இருக்க முடியும்.

அஞ்சா நெஞ்சன் அழகிரி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சுற்றிச் சுழன்று சுயமரியாதைச் சூறாவளிப் பிரசாரம் செய்து வந்த காலத்தில், ஆண்டவன் பக்தியின் பேரால் கழுத்திலே துளசி மணி மாலையும் தேச பக்தியின் பேரால் கதர்த் துணியும் அணிந்திருந்தவர்களால் அழகிரியின் அருமை பெருமைகளை அறிந்து கொண்டிருக்க முடியாது

1948-க்குப் பிறகு பிறந்தவர்கள் அழகிரியைக் காணவோ அவரது உரையைக் கேட்கவோ வாய்ப்பில்லை; இது அவர்களது குற்றமும் ஆகாது. ஆனால் அழகிரி இந்த மண்ணில் வாழ்ந்தபோது, தாங்களும் வாழ்ந்து. தாங்களும் தமிழர்கள் தாம் என்று கூறிக்கொண்டு அழகிரியைப்பற்றி ஒன்றுமே அறிந்து கொள்ளாமல் இருப்பதுதான் வியப்புக்குரியது. அப்படிப்பட்டவர்களெல்லாம் "அழகிரிக்குச் சிலை வைக்கப் போகிறோம்" என்று கூறுவதுதான் வியப்பிலும் வியப்பாகும்.

ஒரு காலத்தில் அழகிரி பேசிய கூட்டத்தில் கல்லெறிந்தவர்களும், அவரைப் பார்த்து கேள்விகள் கேட்டவர்களும்கூடப் பின்னர் மனந்திருந்தி, அழகிரியின் கருத்துக்களைத் தங்கள் இதயங்களில்ஏந்தி. அவர் வழியில் பணியாற்ற நமது இயக்கத்துக்கு வந்திருக்கிறார்கள்; அதுவும்தவறில்லை

ஆனால் அழகிரியைப்பற்றி எதுவுமே தெரிந்து கொள்ளாமல், தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தும் தெரிந்து கொள்ள விரும்பாமல் இருந்து கொண்டு அவர் எந்தக் கொள்கைக்காகப் பாடுபட்டாரோ அந்தக் கொள்கைகளை அடியோடு புறக்கணித்து, சங்கராச்சாரியார் கால்களில் விழுபவர்களும்' சனீசுவரன் கோயிலில் அர்ச்சனை செய்பவர்களும்கூட, அழகிரிக்குச் சிலை திறக்கப் போவதாகச் சொல்வதுதான் வியப்புக்குரிய—வேதனைக்குரிய செய்தியாகும்!

தந்தை பெரியாருக்குச் சிலை திறப்பதும், தன்மான இயக்கத் தளபதி அழகிரிக்குச் சிலை திறப்பதும் 'நாங்களும் ஐயா வழியில் அண்ணா வழியில் வந்தவர்கள்தான்' என்று காட்டிக் கொண்டு ஊரை ஏமாற்றத்தான் பயன்படுமே தவிர, உண்மையான தன்மான இயக்கப் பணியாக இருக்கமுடியாது.

சிலை திறப்பதிலே தி. மு. கழகத்துடன் போட்டியிட்டுக் கொண்டு முன்வருபவர்கள், அந்தச் சிலைக்குரியவர்கள் ஏந்தி நின்ற இலட்சியங்களை நிறைவேற்றி வைப்பதில் தி. மு. கழகத்துடன் போட்டியிட முற்படுவார்களானால் வரவேற்கலாம்; வாழ்த்திப் பாராட்டலாம்!

அழகிரியைப்பற்றி இனியேனும் அறிந்து கொள்ளவேண்டும்; அவரது இலட்சியங்களைப் பின்பற்ற வேண்டும் என்று உண்மையாகவே அவர்களெல்லாம் நினைப்பார்களானால், மகிழ்ச்சி

பகுத்தறிவு இயக்க வரலாற்றில் அழகிரியின் வாழ்க்கை வரலாறு ஒரு சிறப்புமிக்க பாடமாகும். அதனை இன்றைய இளந்தலைமுறையினர் அறிந்து கொண்டால்தான் எவ்வளவு கரடுமுரடான பாதையில் கடந்த ஐம்பது ஆண்டுக்கு மேலாக நமது திராவிட இயக்கம் நடைபோட்டு இன்று இந்த அளவுக்கு வந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

அஞ்சா நெஞ்சன் அழகிரி என்றவுடன் பட்டுக்கோட்டைதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். ஆம். அந்தப் பட்டுக்கோட்டையிலேதான் அழகிரியின் சிலையும் திறக்கப்பட்டுள்ளது...பட்டுக்கோட்டை அழகிரிசாமி என்றுதான் அவரை அனைவரும் அழைப்பார்கள். ஆனால் பட்டுக்கோட்டைக்கும் அவருக்கும் உள்ள தொடர்பு என்ன? இது பலருக்குத் தெரியாது.

அழகிரி பிறந்த மண் மதுரைமாவட்டம். அவர் வாழக்கைத் துணை தேடிக்கொண்டதும். தமது வாழ்க்கையின் பெரும்பகுதியைக் கழித்ததும்தான் பட்டுக்கோட்டை. அதுவே, அவருக்கு அழியாத புகழைத் தேடிக்கொடுத்தது

தலையிலே உச்சிக்குடுமி, நெற்றியிலே பட்டை நாமம்; காதிலே கடுக்கன்; உடம்பிலே கதருடை; இந்தக் கோலத்திலே ஒரு காலத்தில் காட்சியளித்த கே வி அழகிரிசாமி (நாயுடு)என்பவர்தான்,ஈரோட்டுப்பெரியாரின் தானைத் தளபதியாக மாறி, அஞ்சாநெஞ்சன் என்ற அழியாப் புகழுடன் இன்றும் நமது நெஞ்சங்களிலெல்லாம் நின்று நிலவுகிறார்.

தீவிர தேசபக்தியும், தெய்வபக்தியும் கொண்டிருந்த ஒருவர், எப்படி சுயமரியாதை இயக்கச் சூறாவளிப் பிரசாரகரானார் என்பதை அறிந்து கொள்வதே சுவையானவரலாறாகும்.

பட்டுக்கோட்டைக்கும்-புதுக்கோட்டைக்கும் இடையில் உள்ள கருக்காக்குறிச்சி என்னும் சிற்றூரில்தான் அழகிரியின் குடும்ப வரலாறு தொடங்குகிறது.

'கண்டிராத என்னும் குடும்பப்பெயரைக் கொண்ட, வாசுதேவ நாயுடு என்பவரின்மகன் தான் கே. வி. அழகிரிசாமி.

அழகிரியின் தாயார் கண்ணம்மாள்பிறந்த ஊர் மதுரை மாவட்டத்தில் உள்ள அம்பட்டப்பட்டி அல்லது வாவிடமருதூர் ஆகும். வாசுதேவ நாயுடு பரம ஏழையாயினும், கண்ணம்மாள் கொஞ்சம் வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். அம்மையாருக்கு அவரது பிறந்த வீட்டுச் சொத்தாக கொஞ்சம் நிலமும், தோட்டமும் (அந்தக் காலத்தில் பதினைந்தாயிரம் ரூபாய் விலை மதிப்புள்ளது) கிடைத்தது.

கண்ணம்மாள் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு?' என்று கேட்கும் மூடநம்பிக்கையில் ஆழ்ந்திருந்த அந்தக் காலத்திலேயே கண்ணம்மாளை அவரது தகப்பனார் படிக்க வைத்திருக்கிறார் என்பதிலிருந்து, அவரும் கொஞ்சம் முற்போக்கு எண்ணம் படைத்தவர் என்பது புலனாகிறது,

அழகிரிக்கு ஐந்து அல்லது ஆறு வயதாக இருந்தபோதே தந்தையார் இயற்கை எய்திவிட்டார். இளம் வயதிலேயே கைம் பெண்ணாகிவிட்ட கண்ணம்மாள், தம் தாயாரின் அரவணைப்பில் குழந்தை அழகிரியுடன் வாழ்ந்து வரலானார்.

குழந்தை அழகிரி, பசுமலையில் கிருத்தவப் பாதிரிமார்களால் நடத்தப்படும் மிஷன் தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்பட்டான். குறும்பும் சுட்டித்தனமும் மிகுந்திருந்த அழகிரியின் இயல்புகளை பசுமலைப் பள்ளியின் ஒழுங்கு விதிகளால் மாற்றிட முடியவில்லை. இளமையில் தந்தையை இழந்தவன் என்பதனாலும்; ஒரே மகன் என்பதனாலும், அழகிரியின் 'தாயார்' அவனை செல்லமாக வளர்த்து வந்ததன் விளைவாக, அழகிரியிடம் துடுக்குத்தனங்கள் மிகுந்திருந்தன. அவன் தனது இயல்புகளுக்கு பள்ளி இடமளிக்காததால்' பள்ளிக்கே முழுக்குப் போட்டுவிட்டான்.

பாட்டியின் பாசமிகு அரவணைப்பிலும், தாயாரின் 'தாய்ப் பாசத்துடனும் வளர்ந்த அழகிரி,' படிப்பையும் விட்டு விட்டதால் முரட்டுச் சுபாவம்மிக்கவனாய, கூட்டாளிகளுடன் சேர்ந்து பொழுதை வீணாக்கி வந்தான்.

இடையிலே படிப்பை நிறுத்திவிட்டு, தட்டிக் கேட்க ஆள் இல்லாத நிலையில் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்த பிள்ளை, ஊரைத் திருத்திய உத்தமர்களின் வழி நின்று பகுத்தறிவு ஒளி பரவச் செய்யும் பணியில் ஈடுபட்டு ஊர் ஊராகச் சுற்றுபவனாக எப்படி மாறினான்?

வீட்டிற்கு அடங்காத பிள்ளையை ஊரார் அடக்குவார்கள் என்ற நோக்கில் பெற்றோர்களால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டராபர்ட் கிளைவ், கடைசியில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே இந்தியாவில் நிறுவிய தளபதிகளில் ஒருவனாக மாறி வரலாற்றில் இடம் பெறவில்லையா? அப்படித்தான் அழகிரியின் வாழ்க்கையிலும் மாற்றம் ஏற்பட்டது.

தனது எதிர் காலத்தைப்பற்றி எண்ணிப் பாராது தாயின் அறிவுரையையும், பெரியவர்களின் நல்லுரைகளையும் கேட்காது திரிந்த இளைஞன் அழகிரி; கொஞ்சம் கொஞ்சமாக தன் நிலையை உணரத் தொடங்கினான். அப்பொழுது மும்முரமாக நடைபெற்று வந்த முதல் உலகப் போரில் ஒரு சிப்பாயாகச் சேர்ந்து விடுவது என்ற முடிவுக்கு வந்தான். தாயின் பாசம் அவனைத் தடுத்தும், அவன் பணியவில்லை. தனது முடிவுப் படியே போர்க்களம் புகுந்தான் ஒரு வீரனாக!

போர்முடிந்து போர்ப்பணியிலிருந்துதிரும்பிய அழகிரி, பட்டுக்கோட்டையையே தமது தங்குமிடமாக்கிக்கொண்டார். அவருடைய சிறிய தந்தையாரான வழக்கறிஞர் வேணுகோபால் அப்போது பட்டுக்கோட்டையில் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றி வந்தார். அவருடைய ஆதரவில் அங்கு சிறிது காலம் வாழ்ந்து வந்தார். ஆனால் சிறிய தந்தையார் கடைபிடித்து வந்த அரசியல் கொள்கைகளில் அழகிரிக்கு உடன்பாடு ஏற்படவில்லை; அந்தக்கொள்கைகளை வெளிப்படையாகக் கண்டித்தும் பேசி வந்தார்.

முரட்டுக் கதரணிந்து, தேசபக்தராகக் காட்சியளித்த அழகிரி சனாதனத்தைக் காப்

(11-ம் பக்கம் பார்க்க)

நெருப்பு

கருணாநிதி

"நண்பர்கள் எனப்படுவோர், இன்பத்தில் பங்கு பெற்றுத் துன்பத்தில் துயர் துடைக்கும் துணைவர்கள்! ஆனால் எனக்கு வாய்த்த நண்பர்களில் சிலரோ என்னோடு மிக அதிகமாகப் பழகிவிட்டு—இப்போது என்னைத் தணலில் போட்டு வாட்டுகிறார்கள்; வதக்குகிறார்கள். சாதாரணப் பிரச்சனைகளையெல்லாம் பெரிதாக்கிக்—கடுமையாக்கி—அப்பப்பா; அவர்கள் என்னைச் சித்ரவதை செய்வது சகிக்கவில்லை.

காரணம்—

அந்த அளவுக்கு அவர்களிடம் பற்றும் பாசமும் கொண்டு விட்டேன். அதைப் பார்த்து பாசம் என்ற அடிப்படையையே சில நேரம் தகர்த்துவிட முனைகிறார்கள், என் நண்பர்கள்! என் சிந்தனை ஓட்டத்திற்கே கூடச் சில சமயம் தடையாக நின்று கொண்டு, மிக அலட்சியத்தோடு என் வேதனையைக் கவனிக்கிறார்கள்.

தாங்கள் செய்யும் தவறுகளை மறந்துவிட்டுத் தங்களையொரு முறை திரும்பிப் பார்த்துக் கொள்ள மறுத்துவிட்டு, என் இருதயத்தை மிதித்துத் துவைக்கிறார்கள். என்றென்றும் என் இருதயக் கோயிலிலே அவர்கள் அழியாத சிற்பங்களாக இருப்பார்கள் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் போது, அந்தச் சிற்பங்களே வெடித்து மூளியாகி விட்டால்...பிறகு எனக்கு ஏது நிம்மதி?... எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது; நான் தவறு செய்யவில்லையென்று! பெருமளவுக்கு அவர்களுக்கு விட்டுக் கொடுத்து நடந்திருக்கிறேன் என்பதையும் அவர்கள் அறிவார்கள்!

அவர்களுக்காக நான் சந்தித்த 'பகை'யின் வகைகள் எத்தனையென்பதும் அவர்கள் அறியாததல்ல! ஆனாலும் என்னை அழவிடுகிறார்கள், ஏனோ தெரியவில்லை...இந்தக் கடுமையான தண்டனை எனக்கு!"

'நண்பன்' என்ற கதைப் புத்தகத்தை படித்து முடித்த அருள், மேற்கண்ட வாசகங்களை மட்டும் திருப்பித் திருப்பிப்படித்துக்கொண்டு தனது ரயில் பயணத்தை நடத்தினான்; மூன்றாம் வகுப்பில் இருந்தவாறு! சென்னையிலிருந்து மாயவரம் நோக்கி வரும் ரயிலில் — நல்ல இருளில் — அவன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

'நண்பன்' புத்தகத்தை சென்னையில் அவன் வாங்கும் போதே...அவன் மனக்கண் முன்னே பூபதி நின்று கொண்டு அலட்சியமாகச் சிரித்தான். கலங்கிய கண்களைத் துடைத்தவாறு புத்தகத்தை வாங்கி எடுத்துக் கொண்டு ரயிலில் ஏறி உட்கார்ந்ததும் படிக்க ஆரம்பித்தான். படித்து முடிந்துங்கூட திரும்பத் திரும்ப பல இடங்களை அவன் மனப்பாடம் செய்து கொள்ள முனைந்தான்.

"என்னை அழவிடுகிறார்கள்; ஏனோ தெரியவில்லை! இந்தக்கடுமையானதண்டனை எனக்கு ?"

இந்த வாக்கியத்தைப்படிக்கின்ற ஒவ்வொரு முறையும் அவன் மேனி புல்லரித்தது. ரோமக் கால்கள் எழுந்து நின்றன. சிலிர்த்த உடலை அமைதிப்படுத்திக் கொண்டு சிந்தனையை ஓடவிட்டான்.

ஃ ஃ ஃ

பத்துப்பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், அருளும் பூபதியும் சிதம்பரம் கல்லூரியில் மாணவத் தோழர்கள். தில்லையை அடுத்த வல்லம்படுகைதான் அருளின் சொந்த ஊர். வல்லம்படுகையை அடுத்த கொள்ளிடம் கிராமம்தான் பூபதியின் சொந்த ஊர்.

பூபதி — பெயருக்கேற்ற பணக்கார வீட்டுச் செல்லப் பிள்ளை. அருள்; அன்பு வடிவினன். நட்புக்கோர் இலக்கணம்.

கல்லூரித் தொடர்பு அருளையும் பூபதியையும் ஆருயிர்த் தோழர்களாக்கியது. அருளைத் தனியே கண்டவர்கள் "பூபதி எங்கே?" எனக் கேட்பதும், பூபதியைக் காண்பவர்கள் "அருள் நலந்தானே?" என்று கேட்பதும்வழக்கமாகிவிட்டது— அந்த அளவுக்கு அவர்களின் நட்பும் வளர்ந்தது.

வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளத்தான் அருள் பூபதியை அண்டிக் கிடக்கிறான் என்ற சொல் வந்துவிடக்கூடாதே என்பதற்காக அருள் மிக எச்சரிக்கையாக இருந்துகொண்டான். படிப்பதற்குப் பணமில்லாமல் கடைசியாக எஞ்சியிருந்த சில ஏக்கர் நிலங்களையும் தந்தை விற்றுவிட முடிவுகட்டிய வேளையில்கூட அருள் பூபதியிடம் அந்தச் செய்தியை வெளியிடவில்லை.

அப்படி விற்கப்பட்ட நிலத்திலேயிருந்து கிடைத்த பணத்தில் ஒரு நூறு ரூபாயை பூபதிக்கு அவசரக் கடனாகக் கொடுத்து — பிறகு அவன் திருப்பித் தந்தபோது வாங்கிக் கொண்டான்.

எந்த நேரத்திலும் எதையாவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பதும் ... புத்தர் காந்தி, சாக்ரடீஸ் போன்ற பெரியவர்களின் அறவாழ்வைப் பற்றி ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டிருப்பதும் அருளின் வாடிக்கையாக இருப்பது பூபதிக்குப் பிடிக்கவில்லையென்றாலும், எப்படியோ ஒரு பாசம் அவர்களை நண்பர்களாகக் கட்டிப் போட்டு வைத்திருந்தது.

அருள் விரும்புகிற நிறம் ஆகாயத்தின் நீலமென்றால், பூபதி விரும்புகின்ற நிறம் எலுமிச்சம்பழத்தின் மஞ்சளாக அருக்கும். அருள் படிப்பது 'உலகைத் திருத்திய உத்தமர்கள்' என்ற நூலாயின் பூபதி, "உலகப்பேரழகி கிளியோ' என்னும் ஏட்டில் மூழ்கியிருப்பான்.

புராணக் கதைகளுக்குப் புது மெருகு தரப்பட்டுப் பொன் வண்ணத்தில் முகப்புச் சித்திரமும் தீட்டிய புதிய மொந்தையில் பழைய மது தரப்படுகிறதல்லவா; அந்த மது மயக்கத்தில் பூபதி ஆழ்ந்து விடுவான் சந்திரனும் தாரையும், இந்திரனும் அகலிகையும், கண்ணனும் ராதையும்—இப்படிக் குவிந்தன அவன் நூலகத்தில் ஏடுகள்!

தாபத்தால் தவிக்கின்ற தாரையின் உடற்கொதிப்பையும் உள்ளத் துடிப்பையும் ஒரு நொடியில் குளிரச் செய்த சந்திரனின் தழுவலிலே அவள் மெய் மறந்து கிடந்த விதந்தன்னை எப்படித்தான் வர்ணிக்கிறானப்பா இந்த மாமேதை யெனப் பாராட்டி மகிழ்வான் பூபதி!...அந்த வேளை அருளோ, சந்திரனில் மனிதர் உண்டா என்ற ஆராய்ச்சி நூலிலே கருத்தைப் பதிய வைத்திருப்பான் ... இந்திரன் என்று தெரிந்த பிறகும் அகலிகை போகாதிருந்தாள் எனக் குறிப்பிடும் திறமை காம நூல் வல்லார் ஒருவருக்கே ஏற்பட முடியும். இதுவரை பெற்றிடாத பெறற்கரிய இன்பத்தைப் பெறும்போது "இந்திரனே இழிமகனே...இது தகாது" என இடித்துரைக்கும் செயல் அகல்யாவுக்கு ஏற்படாதது நியாயந்தான்!...என விமர்சனம் செய்வான் பூபதி அவனுக்கு இந்த மாதிரி விமர்சனங்களைத் தன் நண்பனிடம் நேட்டுக் கேட்டுச் சலித்து விட்டது. ஆனால் அவர்கள் நட்பு இதுபோன்ற வேறுபாடுகளால் தேய்பிறை ஆகவில்லை...மாறாக வளர்ந்தது....

தந்தைக்கு இயற்கையின் அழைப்பு நெருங்கிவிட்ட காரணத்தால் கல்லூரிப் படிப்பை அரைகுறையாக முடித்துக்கொண்டு அருள், கிராமத்திற்கே திரும்பினான். தந்தையின் கடைசி ஆசையை அவன் எப்படியும் நிறைவேற்றி வைக்க வேண்டிய நெருக்கடியில் தூக்கி எறியப்பட்டான்; மகனை மணக் கோலத்தோடு பார்த்துவிட்டுத்தான் சாகவேண்டுமென்று தந்தை தவித்தார்.

கொள்ளிடத்திலே ஒரு பெண் இருப்பதாகவும் நல்ல அழகியென்றும், ஆனால் அவள் தாயார் ஒருமாதிரியென்றும் அருளிடம் சில ஊர்ப் பெரியவர்கள் கூறினார்கள். சேற்றிலே செந்தாமரை சிப்பியிலே முத்து — முள்ளிலே ரோஜா — என்று பலப்பல படித்திருக்கிற அவனுக்கு அந்தப் பெண் மீது வெறுப்புஏற்படவில்லை. அனுதாபம் பிறந்தது.

தன்னுடைய வாழ்க்கைத் தவறுகளுக்கு மகள் திருமணமாகாமல் தண்டனை அனுபவிக்கிறாள் என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்த கொள்ளிடம் கோமதியம்மாள் தன் பெண் பிரபாவை அவனுக்குத் துணைவியாக்கச் சம்மதிக்காமலிருப்பாளா?... திருமணம் நிச்சயமாயிற்று.

தன்னுடைய சொந்தக் கிராமத்தில் இதுவரை தன் பார்வையில் படாமல் இவ்வளவு சிறந்த எழிலரசியொருத்தியிருந்தது பூபதிக்கே ஆச்சரியத்தை அளித்தது திருமணத்தன்று நண்பர்களிருவரும் ஒருவரையொருவர் கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.

எந்த வேறுபாடுகளும் இதுவரையில் நண்பர்களிடையே எழுப்பாத ஒரு பெரும் புயலை இப்போது அந்தத் திருமணம் எழுப்பி விட்டது என்றுதான் கூற வேண்டும்.

தன் நண்பனுக்குத் திருமணம் ஆனதிலே பூபதிக்கு மகிழ்ச்சிதான்! ஆனால்...... அழகுப் பதுமையாக அச்சடித்தசிலைபோல... ஆரணங்கு ஒருத்தி அருளுக்குக் கிடைத்தது... அதன் மூலம் தன் உள்ளத்தில் ஒரு சூறாவளியைக் கிளப்புவாள் என அவன் எதிர்பார்க்கவில்லை. நண்பனின் மனைவி அவனுக்குத் தங்கை போல!...... அவனும் அந்த எண்ணத்தை இழுத்து இழுத்துப் பிடித்து நிறுத்திப் பார்த்தான். அந்தக் கொள்கை இருதயத்திலிருந்து வழுக்கி வழுக்கி ஓடிற்று.

"அய்யோ அருள் எவ்வளவு தூய்மையானவன்? களங்கமில்லாது பழகுகிற நண்பனுபிற்றே..... அவன் மனைவியைப் பற்றியா நாம் இப்படிநினைக்கிறோம்......"— பூபதிக்குமனச்சாட்சிகுடைந்தது!......புராணமோ இடையிலே நுழைந்தது! குரு பத்தினி தாரையையே தாரமாக்கிகொண்டான்சந்திரன் ......அவனுக்குத்தான் அனைவரையும் விட உயர்ந்த இடம்; சிவனின் தலையிலே!

அண்ணன் மனைவியைக்கூடி மகிழ்வித்தான் சுக்ரீவன்... அவன்தான் அயோத்தி ராமனுக்கு ஆருயிர்த் தோழன்!

பூபதி துணிந்துவிடவில்லை. தாபமும்தணிந்துவிடவில்லை; மணமக்களை வாழ்த்தி விட்டுக் கொள்ளிடத்திற்குப் புறப்பட்டான்.

சில மாதங்களுக்குப் பிறகு அருளின் தந்தை இறுதியாகக் கண்ணை மூடினார். அப்போது துக்கம் விசாரிக்க வந்த பூபதி 'நீத்தார் நினைவு' முடிந்த பிறகும் கூட ஊருக்குப் போகவில்லை நண்பனுக்கு ஆறுதல் அளிப்பதற்காக அங்கேயே தங்கிவிட்டான். அருள், வெள்ளை மனங் கொண்டவன்.

பூபதியின் உள்ளத்தில் மூண்டிருக்கிற நெருப்பை அவன் உணரவில்லை. பிரபா மட்டும் அதை உணர்ந்து கொண்டு வருந்தினாள். நெஞ்சிலே கொழுந்து விடும் இ ஜுவாலை பூபதியின் கண்களின் வழியாக வெளி வந்து அவளைப் பலமுறை சுட்டிருக்கிறது..

"அவர் ஏன் இங்கேயே இருந்து கொண்டிருக்கிறார்? பணக்கார வீட்டுப் பிள்ளை... நம்முடைய வீட்டு எளிய உணவை எத்தனை நாளைக்குச் சகித்துக் கொள்ள முடியும்? ஊருக்கு அனுப்பி வையுங்களேன்!" என்று கணவனிடம் ஜாடையாகச் சொல்லிப் பார்த்தாள் அதற்குப் பரிசாக அருளின் கோபத்தைத் தான் பெற்றாள்.

பூபதியின் உள்ளப் போராட்டம் அவனை வதைத்துக் கொண்டேயிருந்தது. தவறு செய்கிறோம் என்று தெரிந்தும் அதைச் செய்யாமலிருக்க முடியவில்லையே எனத் தன்னையே நொந்து கொண்டான், இயற்கையமைப்பு தனக்கு அப்படியொரு பிரத்தியேக மன அரிப்பைப் படைத்திருப்பதாகவும் அதைத் தீர்த்துக் கொள்ளத்தான் தேர்ந்தெடுக்கும் மார்க்கம் சரியானதென்றும் சில சமயங்களில் முடிவுக்கு வந்தான்.

பிரபாவை அவன் காணாத நேரங்களில் அவ்வளவாகப் பித்தம் முதிர்வதில்லை நண்பன் அருளுடன் ஆற்றோரம் செல்லும் போதும் மணல் மேட்டில் அமர்ந்து பழைய கதைகளைப் பேசும்போதும் "சே. சே; நண்பனுக்கு துரோகம் செய்யக்கூடாது என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டேயிருப்பான். வீட்டுக்கு வந்ததும், பிரபா உணவு பரிமாறவருமெழிலைக் கண்டதும் மணல் மேட்டு முடிவுகள்மண்ணாகவேபோய் விடும்.

பள்ளித் தோழன் —பாசம் மிக்கான் — பற்றுடையோன் அருகிருக்கிறான்; அவன் அன்புத் துணைவியைப் பற்றி அற்ப எண்ணங்களை அலையவிடுகிறோம் என்ற பயங்கரத்தையே மறந்து விடுவான்.

அவளும் அவ்வளவு அழகாக இருந்தாள். உணவு பரிமாறும்போது அவனையறியாமலே அவன் கண்கள் அவளைச் சுற்றும். அவளை அண்ணாந்து பார்ப்பதற்காக வேண்டி அடிக்கடி தண்ணீர் குடிப்பான். உறிஞ்சிக் குடித்தால் பார்வை மேலே போகாது என்பதற்காக மிகவும் சுத்தக்காரன் போலக் குவளையை மேலே தூக்கிக் குடிப்பான். அந்த இழி பண்பு தெரியாத அருள், "சும்மா எச்சில் செய்து குடிடா பூபதி!" என்று களங்கமின்றி கூறுவான், பூபதி அவளை ரசிப்பான். அருளோ, பூபதியின் இலையில்என்ன இல்லையென்பதைக் கவனித்து அடிக்கடி பிரபாவைக் கூப்பிட்டு இல்லாததைப் பரிமாறச் சொல்வான்!

செய்வது தவறுதான்! நன்றாகத் தெரிகிறது பூபதிக்கு! அதற்காக வருந்தவும் செய்கிறான் அனுசூயா நிர்வாணமாகவே வந்து பரிமாற வேண்டும் என்று ஆசைப்படவில்லையா மும்மூர்த்திகளும்... அதைவிட இதுபெரிய தவறா என்று முடிவு கட்டிவிட்டான் போலும்!...

அருள் பணமில்லாமல் கஷ்டப்படுகிறான் என்பதையும் பூபதி புரிந்து கொண்டான். பண உதவி செய்தாலோ அருள் பெற்றுக் கொள்ள மாட்டான் அந்தச் சுபாவமும் பூபதிக்குத் தெரியும் வேலைகளுக்கு விண்ணப்பம் போட்ட இடங்களில் இருந்தெல்லாம் 'இல்லை' என்ற ஏகோபித்த பதிலே வந்தது பூபதி அருள் எதுவும் சந்தேகப்பட்டு விடக்கூடாதென்று பயந்து ஊருக்குப் புறப்பட்டு விட்டான். நினைத்தது நடக்கவில்லையே என்ற கவலையோடு!

அருளும், பிரபாவும் சாப்பாட்டுக்கே மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற சேதியை பூபதியின் பண்ணைக் காரியஸ்தன் மூலமாகத் தெரிந்து கொண்ட கோமதியம்மாள் மருமகன் வீட்டுக்குப்போய் சேர்ந்தாள். மருமகனுக்கு ஒரு வேலை கிடைக்கும் வரையில் மகள் கொள்ளிடத்திலேயே வந்து இருக்கட்டும் என்று சொல்லி அழைத்தும் போய்விட்டாள்.

பிரபா அருளைப் பிரிய மனமின்றி ஒருநாள் இரவு முழுதும் அழுதாள். அருளோ தன் நிலைமையை எடுத்துக் கூறி 'எங்காவது வெளியே சென்று வேலைக்கு முயற்சித்து வெற்றியோடு வந்து உன்னை அழைத்து வருகிறேன்; கவலைப் படாதே" என்று உறுதிமொழி தந்தான.

அதன்படி அருள் வேலை தேடிப் புறப்பட்டான்... ஒரு நாள் இரண்டு நாளல்ல; பல மாதங்கள் வேலை தேடி அலைந்தான்.

பிரபா, கொள்ளிடத்திற்கு வந்திருக்கிற சேதி கேள்விப்பட்ட பூபதி, அடிக்கடி அவள் வீட்டுக்குப் போய் அருளின் சுகத்தைப் பற்றி மிக அக்கறையோடு விசாரித்து வந்தான். பிரபாவின் தாயாருக்கும் பூபதி மீது மரியாதையும் அன்பும் அதிகமாயிற்று பெரிய மனிதர் வீட்டுப்பிள்ளை தன் குடும்பத்திலே இவ்வளவு அக்கறையாக இருக்கிறதே என்று வியந்தாள்- அருளுக்கும் பூபதிக்கும் உள்ள நட்பைக் கேள்விப்பட்டு, அவனை பரிபூரணமாகக் கோமதியும் நம்பி விட்டாள் பணமுடை ஏற்படுகிற நேரங்களில் பத்து அஞ்சு என்று அவனிடம் கோமதியம்மாள் வாங்கிக் கொண்டாள்,

ஒரு நாள்... சிதம்பரத்தில் மார்கழித் திருநாள். கோமதியம்மாள் வழுக்கி விழுந்தவளானாலும் பக்தி அனுஷ்டானங்களில் பெரும் ஈடுபாடு உடையவள், மார்கழித் திருநாள் காணுவதற்கு சிதம்பரத்திற்குப் புறப்பட்டாள் பிரபா வர மறுத்துவிட்டதால் அவளைத்தனியே விட்டுவிட்டுக் கிளம்பினாள்,

கோமதி, சிதம்பரம் போருப்பதைத் தெரிந்து கொண்ட பூபதி, பிரபாவிடம் படையெடுத்தான். 'அருளிடமிருந்து கடிதம் ஏதாவது வந்ததா?' என்று விசாரணையைத் துவக்கித் திடீரெனக் கதவைத் தாளிட்டு அவளது கரம் பற்றி இழுத்தான்.

பிரபா கூச்சல் போட அஞ்சினாள் கூச்சல் போட்டு ஊர் கூடி விட்டாள் பெரிய மனுஷர் விரோதம் வருமே யென்று நடுங்கினாள் அதனால் பணிவோடுபூபதியைபார்த்து "நண்பருக்குத் துரோகம் செய்யாதீர்கள்" என்று கெஞ்சினாள்பூபதியோ நெருப்பாக நின்று கொண்டிருந்தான்.

கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. பூபதிக்கு பீதி மேலிட்டது எப்படியாவது ஓடிவிட வேண்டுமென்று கொல்லைக் கதவைத் திறந்து கொண்டு ஓடினான். தெருக் கதவைத் தட்டியது அருள் ... கொல்லைப்புறமாக யாரோ ஓடுவதை அருள் கவனித்தான். ஓடிப்போய்ப் பார்த்தான். பூபதிதான் என்பதைப் புரிந்துக் கொண்டான் தெருக் கதவு திறக்கப்பட்டது.

அருளைக் கண்ட பிரபா ஓடிப்பாய்ந்து "அத்தான்" என்று தழுவிக் கொண்டாள் "விடு என்னை! நான் பூபதியல்ல!" என்று அவளை உதறிவிட்டு அருள் எங்கேயோ வேகமாக நடந்தான்.

ஃ ஃ ஃ

இருண்ட வானத்தைப் பார்த்தவாறு நினைவுச் சுழலிலே சிந்தனையைச் சிக்க வைத்திருந்த அருள் தான் வரும் ரயில் வண்டி கிள்ளை' என்ற புகைவண்டி நிலையத்திற்கு அருகாமையில் வந்து விட்டதை உணர்ந்தான். அடுத்தது சிதம்பரம். அடுத்தது வல்லம் படுகை அதற்கடுத்தது கொள்ளிடம்!...

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் பிரிந்து சென்ற தன் மனைவியைப் பார்க்கப்போகிறான் பூபதியின் ஆசை நாயகியாகி விட்டாள் என்ற தவறான முடிவு செய்து நண்பன் மீதும். அவள் மீதும் ஆத்திரத்தைக் காட்டாமல் அமைதியோடு மலேயா நாடு நோக்கிப் பிழைக்கஓடிவிட்ட 'பெருந்தகை' ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு திரும்பி வருகிறான் மனைவியைச் சந்திக்க. ஏதோ ஒரு வகையான இன்பப் பெருமூச்சு!... அதோடு பெட்டியைத் திறந்தான் அருள். ஒரு நீண்ட கடிதத்தை எடுத்துப் பார்த்தான். அந்த வழிப் பயணத்தில் அதை அவன் பதினேழாவது தடவையாக படிக்கிறான்;

"அன்புள்ள அத்தான்! உங்கள் பிரபாவின் வணக்கம் பலநாள்யோசித்துயோசித்து கடைசியாக நான் செய்த முடிவுதான் இந்தக் கடிதம். நண்பன் உங்களுக்கு துரோகியாகி விட்டான் நானும் துரோகியாகி விட்டேன்.

அன்றொரு நாள் அப்பழுக்கற்ற என்மீது சந்தேகப்பட்டு சந்தர்ப்பம் செய்த சதியால் எனக்குக் களங்கம் கற்பித்தீர்கள் சுமார் எட்டு ஆண்டுகள் உருண்டு விட்டன. இந்த இடைக் காலத்தில் பிரபாவின் வாழ்க்கையிலே ஏற்பட்ட சுழற்சிகள் எப்படிப்பட்டவை. அதற்கு யார் காரணம் என்பதை நீங்கள் உணரவேண்டாமா?

மாசுபடிந்த ஒருமாதாவின் வயிற்றிலேதான் பிறந்தேன். தாய் செய்த குற்றம் என் தலைமீதுவிழுந்தது. எனக்குத் தாலி கட்ட யாருமே முன் வராதபோது தாங்கள் வந்தீர்கள்; தெய்வம் போல தேன் மணக்கும் வாழ்விலே என்று தான் நம்பினேன். தீக்காடு சூழுமென்று எதிர்பார்க்கவில்லை. என்னைச் சந்தேகப்பட்டுத் தெளிவற்ற நிலையில் எதையும் தீர விசாரிக்காமல் போய்விட்டீர்கள் எங்கு போனீர்கள் என்று தெரியமால் தவித்தோம்.

இரண்டு ஆண்டுகள்ஏங்கிக் கிடந்தோம் நானும்என்தாயும் தங்கள் ஆருயிர் நண்பன் பூபதியும் தங்கள் இருப்பிடத்தைக் கூறவில்லை ...நீங்கள் என்னைச் சந்தேகப்பட்டீர்களே, அன்றைய தினம் நடந்ததுதான் என்ன? ஆரம்பத்திலிருந்ததே சொல்கிறேன்.

மாமாவின் சாவின்போது ஊருக்கு வந்த பூபதி சிதம்பரம் கல்லூரிக்குக் கூடப் போகாமல் நம் வீட்டில் தங்கியிருந்தானே; அது எனக்காகத்தான் அப்போதே அவனைப் பற்றி ஜாடை காட்டினேன். என்மீது சீறி விழுந்

(8-ம் பக்கம் பார்க்க)

நெருப்பு

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்கள். அம்மா தில்லைத் திருவிழாவிற்குப் போன நேரம் என்னைக் கெடுத்து விட வந்தான். தக்க சமயத்தில் தாங்கள் வந்தீர்கள். கொல்லைப்புறம் ஓடினான். தாங்களோ அந்த நிகழ்ச்சியை வேறு விதமாகக் கற்பனை செய்து கொண்டீர்கள்

இரண்டு வருட காலமாக தங்களை நான் தேட... அவனே என்னை நாடி வரத் தொடங்கினான்... அம்மாவைப் பற்றித்தான் உங்களுக்குத் தெரியுமே, சேரழிந்தவர்கள்!... இந்த நிலையில் அவர்களைக் காசம் பற்றிக் கொண்டது.

அம்மாவைக் காப்பாற்றும் பெரிய பொறுப்பு என்மீது விழுந்தது! அம்மா குடும்பத்தின் ஷேமத்திற்கு அறிவுரைகள் வழங்க ஆரம்பித்தார்கள் அந்த உரைகளில் தூய்மை இல்லாவிட்டாலும் அம்மா உயிர் வாழ்வதற்கு அதை நான் கடைப் பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

'பூபதிக்கு இணங்கி விடடி கண்ணே!' என்று தாடையைப் பிடித்துத்தாய் கெஞ்சினார்: நோயைப் போக்கிக் கொள்ளப் பணம் கிடைக்குமென்று! பிறகு நான் என்ன எழுத இருக்கிறது- அத்தான்!

நீங்கள் கூடப் பூபதிக்கு எழுதியதாக ஒரு கடிதத்தை என்னிடம் காட்டினான், அதில் நீங்கள் எங்கள் இருவரையும் வாழ்த்தியிருந்தீர்கள். அக்கடிதம் அவனுக்கு வரும்போதெல்லாம் நான் உங்களுடையவளாகத்தான் இருந்தேன். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகுதான் அவனுடைய வைப்பாட்டியானேன் நேரம், காலம் ஒய்வு ஒழிச்சல் இல்லாத காமப்பதுமையாக அவனுக்கு நான் மாறினேன் அதன் விளைவாகக் காசு குவிந்தது. அம்மாவின் காசம் குறைந்தது இதோ அந்தக் காசம் என்னைத் தொத்திக் கொண்டது'... அம்மாவுக்குக் காசம் தீர நான் சம்பாதித்துக் கொடுத்தேன்- இப்போது எனக்கே காசம்! என்னைக் காப்பாற்ற எந்த வாரிசும் இந்த வீட்டில் இல்லை. எனக்குக் காசம் என்று கேள்விப்பட்ட மறுநாளே பூபதி விலகி விட்டான்.

சென்னையிலே ஒரு நீதிபதி வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழுகிறான், நானோ. நித்தியகண்டம் பூரண ஆயுசாக இருக்கிறேன்;

அத்தான் தங்களுக்குத் துரோகம் புரிந்த நன்பனுக்கு வாரந்தோறும் தாங்கள் எழுதிய வாழ்த்துக் கடிதங்களைப் படித்தேன். அதிலிருந்துதான் மலேயாவில் தாங்கள் விலாசத்தையும் தெரிந்துக் கொண்டேன். எவ்வளவு பெரிய உத்தமர் நீங்கள்! உங்களுக்கு நான் எத்தனை பெரிய பாவம் புரிந்திருக்கிறேன். இனியும் என்னை தாங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டவில்லை. நான் விரைவில் மறைந்து விடுவேன் இந்த மண்ணை விட்டு அதற்குள் ஒரு முறை தங்கள் முகத்தைப் பார்த்து விட்டால் அதுவே நான் செய்த குற்றங்களுக்குப் பிராயச்சித்தமாக இருக்கும்

தங்கள் காலடிகளை என் கண்ணீரால் குளிப்பாட்டி விட்டுக் கண்ணை மூடுவதில் தான் எனக்கு நிம்மதி ... வருவீர்களா!

அன்புள்ள,
பிரபா

கடிதத்தை மடித்துப் பெட்டியிலே வைத்தான். கண்கள் நீர்வீழ்ச்சிகளாக மாறின. தனக்குத் தானே சற்று உரக்க ஆகாயத்தைப் பார்த்து 'உன்னை மன்னித்து விட்டேன் பிரபா'' என்று கதறினான். அந்த ஒலி புகை வண்டியின் ஒலியோடு காற்றில் கலந்தது

வண்டி. சிதம்பரம் நிலையத்தில் நின்றது. அருள் ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தான்! யார் அது? ..பூபதி ஆம் அவனேதான் முதல் வகுப்பு வண்டியிலேயிருந்து எட்டிப்பார்த்தான் அருள் தன்னை மறந்து விட்டான் 'பூபதி' என்றவாறு ஓடிப்போய் முதல் வகுப்பில்ஏறிக் கொண்டான். பூபதிக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குள் ரயிலும் புறப்பட்டுவிட்டது

மௌனமாக இருந்த பூபதியைப் பார்த்து இது யார்' என்று பக்கத்தில் இருந்த ஒரு பெண்ணைக் காட்டினான் அருள். '' இதுதான் என் மனைவி!' ஓகோ... அப்படியா?.. ம்... என் மனைவி சௌக்கியமாக இருக்கிறாளா பூபதி' பூபதி திக்கிட்டான். முகம் வெளுத்தது. பூபதியின் மனைவியும் விழித்தாள் எதுவும் புரியாமல்'

''என்னடா விழிக்கிறாய்? என் மனைவிக்கு உடல் நிலை சரியில்லையாம்—அதைப் பார்க்கத்தானடா போகிறேன் இப்பொழுது அவள் உனக்கு வைப்பாட்டியாக இல்லையா?...சாறற்ற சக்கையாகி விட்டாளாக்கும்!''

'' ஏய் அருள் போதும் நிறுத்து! என்ன உளறுகிறாய்?

'' அடப்பாவி, என்னிடமிருந்து அவளைப் பிரித்தாய் நானும் அனுமதித்தேன் உன்னிடம் நட்பின் காரணமாக நான் ஒரு பயனும் பெறவில்லை நானே மானத்தையே நட்புக்காகப் பரிசளித்தேன்! பரிசளிக்கப்பட்ட பொருள் எவ்வளவு விலை உயர்ந்தது! அதையாவது காப்பாற்றினாயா பாவி ...வெள்ளிக் கூஜா நசுங்கி விட்டால் உருக்கிப் புதுக் கூஜா செய்து கொள்வார்கள். நீயோ. கூஜாவையே குப்பையில் எறிந்துவிட்டு இன்னொரு கூஜா வாங்கிவிட்டாய்...அவ்வளவு பணத்திமிர் உனக்கு''

அருளின் பேச்சிலே ஆத்திரம் குமுறியதைப் பூபதி உணர்ந்து நடுங்கினான்.

''என்னிடமும் வாழ விடாமல் நீயும் வாழ வைக்காமல் பிரபாவைக் கெடுத்து விட்டாய்...இதுவரையில் தான் நீ எனக்கு நண்பன் —இனி என் எதிரி!'' என்று அலறியவாறு இடுப்பில் செருகியிருந்த ஒரு கத்தியை எடுத்துப் பூபதியின் நெஞ்சிலும் வயிற்றிலும் முகத்திலும் மாறி மாறிக் குத்தினான் அருள்...

பூபதி சுருண்டு விழுந்தான் மூச்சற்று? ..அதற்குள் பூபதியின் மனைவி, அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்தாள். ரயில் நின்றது. கொள்ளிடம் பாலத்தைத் தாண்டி! ரயில் நின்றவுடனே அருள் குதித்து ஓடினான்; இருளில் திசை தெரியாமல்...

அதோ...ஒரு வெளிச்சம்... அங்கு ஓடினான்...சுடுகாட்டில் ஒரு பிணம் எரிந்து கொண்டிருந்தது. அந்த நெருப்பு வெளிச்சத்தில் அவன் சட்டை முழுதும ரத்தக்கறையாக இருப்பதைக் கண்டான். அதோடு ஊருக்குள் ஓடினால் கொலைகாரனைக் கண்டு பிடித்து விடுவார்கள் என்று பயந்து சட்டையைக் கழற்றி அந்த நெருப்பின் மீது வீசினான். பிணத்தைப் பொசுக்குவதற்கு அந்தச் சட்டையும் பயன்பட்டது.

அங்கிருந்து பிரபாவின்வீடு நோக்கி ஓடினான். கோமதியம்மாள் வாசலில் உட்கார்ந்திருந்தாள் என்பதைப் பார்த்தவாறு! ... விளக்கு 'மினுக் மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது

'' அத்தே, பிரபா எங்கே?'' என்றான். கோமதியம்மாள் ஓவென அலறினாள்...

''தம்பி ..பிரபா, இன்று காலையில் போய்விட்டாள் .. இரவு பத்து மணிக்குத்தான் என் கண்மணியின் உடலுக்கு நெருப்பு மூட்டினார்கள்' என்று வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள்!...

அப்படியானால், அருள் ரத்தக்கறை படிந்த சட்டையைக் கழற்றிப் போட்டது பிரபாவைப் பொசுக்கும் நெருப்பின் மீதுதானா?...

அவளைப் பொசுக்கிய இரு நெருப்புகளுமே அணைந்து விட்டன...

அருள் மட்டும் அலைந்து கொண்டிருந்தான்.

'காவு' கொள்ளும் காவல் நிலையங்கள்!

இட்லரின் ஆட்சியிலும் ஸ்டாலினின் ஆட்சியிலும் ஒருவனை 'விசாரணை செய்வதற்கென்று சொல்லி காவலர்கள் அழைத்துப் போவர்கள்; அப்படி அழைத்துச் செல்லப்பட்டவன் மீண்டும் வீடு திரும்ப மாட்டான்- அவனைக் காண வேண்டுமானால் கல்லறைக்குத்தான் போக வேண்டும்'

அதேபோல இன்று எம். ஜி. ஆரின் ஆட்சியின் கீழ் 'விசாரணை'க்கென்று காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றவரை மீண்டும் உயிருடன் காணமுடியும் என்பதற்கான உத்திரவாதம்' கிடையாது'

எம். ஜி. ஆர். ஆட்சிக்கு வந்த இந்தக் குறுகிய காலத்திற்குள் காவல் நிலையங்கள் பல உயிர்களைக் காவு கொண்டு விட்டன என்பதை மறுப்பதற்கில்லை

எடுத்துக் காட்டாக, அண்மையில்—

திருச்சி மாவட்டத்திலிருக்கும் கல்லகம் கிராமத்தைச் சேர்ந்த நாற்பத்து நான்கு வயதான அடைக்கலசாமிஎன்பவரை திடித்திருந்ததாகச் சொல்லி காவலர்கள் கைது செய்தார்கள்; அவரைக் காவல் நிலையத்தில் வைத்து 'போலீஸ் முறைப்படி' கவனித்த பிறகு குடித்திருந்ததற்கான சான்றிதழைப் பெற மருத்துவ விடுதிக்குக் கூட்டிச் சென்றனர் காவலர்கள். அவரைப் பரிசோதிப்பதற்காக அவர் உடலைத் தொட்ட மருத்துவர்கள் திடுக்கிட்டார்கள். காரணம் ஏற்கனவே அவர் இறந்து விட்டார்'

காவல் நிலையத்தில் அடிக்கப் பட்டதாலேயே அவர் மாண்டார் என்பதை அறிய வந்த மக்கள் ஒன்று கூடி ஆர்ப்பாட்டம் செய்துள்ளார்கள்!

எம். ஜி. ஆருக்கு ஒரு யோசனை!

பட்டுக் கோட்டையில் நாம் சிலை திறக்கிறோம் என்றதும் இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்.

'பட்டுக் கோட்டையிலே அழகிரி பிறந்த நாளில் அவருடைய சிலையை நாங்கள் வைக்கப் போகிறோம்' என்று அறிக்கை விட்டு இருக்கிறார்,

இங்கே பொதுச்செயலாளர் பேராசிரியர் குறிப்பிட்டது போல், அதிலே நானும் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்

பட்டுக் கோட்டையிலே இரண்டு சிலை வைப்பதை விட இன்னும் கொஞ்சம் தள்ளிப்போய் மதுக்கூரில் அவர் அந்தச் சிலையை வைக்கலாம். அல்லது அவர் பட்டுக் கோட்டைக்கு அடுத்து அதிகமாக வாழ்ந்த திருவாரூரில் கூட சிலை வைக்கலாம் என்று எம். ஜி. ஆருக்கு ஆலோசனை கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

-கலைஞர்

★★★★★★★-★★★★

நம் நாடு
ஆசிரியர்: மு.கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00

ஆறுமாத சந்தா ரூ. 12-50

மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★★★-★★★★★★

'நம்நாடு' விற்பனையாளர்

சென்னை — விருகம்பாக்கம் 'நம்நாடு' விற்பனையாளராக கீழ்க்கண்ட தோழர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சீனுவாசன்.
40. பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை
சென்னை-14

‘தினமணி’யும் புறநானூறும்!

புலவர் கோ. அண்ணாமலை எம். ஏ.

(4)

“சங்க காலத்தில் தமிழ்ப் பண்பாடு தனித்தன்மை பெற்றிருந்தது எனலாம். ஆனால் பிற பண்பாடுகள் தம் பண்பாட்டில் புகுந்து கலந்து விடலாகாது என்று அக்காலத் தமிழர் வேலியிட்டு வாழ்ந்திலர். தமிழ்ப் பண்பாட்டிற்கும் பிற பண்பாடுகளுக்கும் தொடர்பே இல்லை என்று சொல்வது பொருந்தாது

பிற மொழியினரையும் பிற நாட்டினரையும் பிற பண்பாட்டினரையும் வெறுத்தொதுக்காமல் உறவாடினர். பிற நாடுகளைப் பட்டினப்பாலை ‘பழிதீர் தேயம்’ என்று பாராட்டுகிறது. தமிழரது பெருந்தன்மையையும் மனவிரிவையும் அது காட்டுகிறது:

— இத்தனையும் தினமணிக் கட்டுரை வரிகள்!

அடடா தினமணிக்குத் தமிழரையும் தமிழ்ப் பண்பாட்டையும் உள்ளது உள்ளபடிச் சொல்லிப் பாராட்டுவதில்தான் எத்தனை ஆர்வம். எவ்வளவு சரிசனம் என்று எண்ணத் தோன்றும்! எவ்வளவு நயமான வரிகள்! அவ்வளவும் நயமானவை மட்டுமல்ல நயவஞ்சகமானவை என்பதை அடுத்துவரும் வரிகளைப் படித்தாலே விளங்கிவிடும் அவை இவை —

‘யவனர் நன்கலம் தந்த தண் கமழ் தேறலை (மதுவை) பொன் செய் கலத்து ஏந்திப் பருகி மகிழ்ந்ததுபோலவே புலம்பெயர் மாக்களது பண்பாடுகளிற் சிறந்தவற்றையும் தமதாக்கிக்கொள்ளப் பின்வாங்கினர் அல்லர் தமிழர்!

யவனர் — கடல் கடந்த வெளிநாட்டுக்காரர்கள் கொண்டுவந்த மதுவை அருந்தியதைப் போல —

வெளிநாட்டுக்காரர்களின் நல்ல பண்பாடுகளைப் பண்பாடுகளில் சிறந்தவற்றை தமிழர்கள் தம்முடையவை ஆக்கிக் கொண்டார்கள் என்கிறது தினமணி!

வெளிநாட்டுக் காரர்கள் பண்பாட்டைத் தமிழர்கள் தம்முடையவை ஆக்கிக் கொண்டார்களாம் — எதைப் போல என்றால்,

மதுவை ஏற்று அருந்தியதைப் போல என்கிறது தினமணி ஆக தினமணியின் வார்த்தைப்படி மதுவை ஏற்று அருந்துவது வெளிநாட்டுக் காரர்களிடமிருந்து தமிழர்களுக்குக் கிடைத்த ஒரு பண்பாடு! இருக்கலாம்.

தமிழ்ப் பண்பாட்டுக்கு ஒவ்வாத தீய பழக்கவழக்கங்களும் மூடப்பழக்கவழக்கங்களும் தமிழரிடம் தொத்திக் கொண்டதற்குக் காரணமே —

தினமணி கூறுவது போல,

“பிற பண்பாடுகள் தம் பண்பாட்டில் புகுந்து கலந்து விடலாகாதென்று அக்காலத் தமிழர் வேலியிட்டு வாழாமையே ஆகும்.

பிற நாட்டினரையும் பிற பண்பாட்டினரையும் வெறுத்தொதுக்காமல் உறவாடிய காரணத்தால்தான் தினமணி மூதாதையர் — ஆரியர் — காட்டிய வழியிலே நடந்து ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்கிற தமிழ்ப் பண்பாட்டினைக்கூட சிலநேரம் மறந்து — பேகனைப் போல — சிலர் பேதலித்ததாகப் புறநானூறு கூறுகிறது. பேகனைப் போன்றவர் பேதலிப்புக்குக் காரணமே பிற பண்பாட்டினரோடு கலந்துறவாடியதுதான்!

“எத்தனைப் போர்களில் நீ வெற்றி பெற்றால் என்ன? இமயம் வரை உன் கொடி பறந்தால் என்ன? எத்தனை மன்னர்கள் உன் திருவடிகளில் முடியைப் பதித்தால் என்ன? போக போக்கியங்களிலே புரண்டால் என்ன

நீ யாகங்கள் செய்தனையா? இன்றேல் நீ போகுமிடம் —” என்று ஈழம் முதல் இமயம் வரை வென்றடிப் படுத்திய மன்னர்களைக்கூட, சேரன் செங்குட்டுவனைக்கூட ஆரியப் பண்பாடு அடக்கி - யாகங்கள் செய்ய வைத்திருக்கிறது நாமும் அறிவோம்!

ஆனால் அது ஆரியப் பண்பாடு அவனை அடக்கியாண்டதற்கு அடையாளமாகி விடாது! காவா நாவினாகக் கனகனையும் விசயனையும் கல் சுமக்க வைத்த கன்னித் தமிழ்க் காவலன் அவன் வேற்றுப் பண்பாளர் அன்போடும் பணிவோடும் வேண்டும்போது அவர் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவர் பண்பாட்டின் அடிப்படையிலே யாகங்கள் செய்ய ஒப்புக் கொண்டான்! ஆரியப் பண்பாட்டினரானாலும் — அந்தப் பண்பாட்டினரானாலும் வீரம் பேசி வந்தால் வேள்வி போர்க்களத்திலேதான் நடந்திடும்!

வீரம் பேசி வந்தவர்கள் வெற்றிபெற்றதில்லை ஆனால் விவேகத்துடனும் விநயத்துடனும் வந்து கேட்டால், வேள்வி யாகசாலையில்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்கிற மன்னனை நெட்டிமையார் என்ற புலவர் பாராட்டுகிறார். என்ன சொல்லிப் பாராட்டுகிறார்?

‘உன்னிடத்தில் போர் செய்து தோற்றுப் போய் வசைபட வாழ்ந்தவர் தொகை அதிகமா?

நான்கு வேதங்களில் கூறியுள்ள முறைப்படி நீ ‘நடத்திய’ யாகங்களில் நட்ட தூண்களின் தொகை அதிகமா?’

— என்று கேட்பதன் மூலம் அவன் போர்ச்சிறப்பையும் வேள்விகள் — யாகங்கள் — செய்யும் சிறப்பையும் ஒருசேரப் பாராட்டுகிறார். இப்படிப்பட்ட செய்திகளைப் படிக்கும்போதெல்லாம், மிகப் பெரிய வீரன் எவனோ அவனை நத்திப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்ட இனத்தின் பழைய வரலாற்றைத்தான் புறநானூறு காட்டுகிறது என்று இதுவரை நாம் எண்ணியிருந்தோம்! இப்போதுதான் புரிகிறது — அதுவும் தினமணி கட்டுரை எழுதிய பிறகுதான் தெரிகிறது. பாரதநாட்டின் ‘பிறிதொரு பண்பாடாகிய” ஆரியப் பண்பாடு அது என்று!

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன்! அவனைப் பாலைக் கௌதமனார் என்ற பார்ப்பன புலவர் பாடினார் பத்துப்பாட்டு பாடலைக் கேட்ட பல்யானைச் செல்கெழு குட்டுவன்; புலவனைப் பார்த்து என்ன பரிசில் வேண்டுமென்று கேட்டான்! யானும் என் பார்ப்பனியும் (மனைவியும்) சுவர்க்கம் புகல் வேண்டும்!’ என்றான் புலவன்

உடனே மன்னன் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பார்ப்பனர்களிலே பெரியோரைக் கலந்து ஆராய்ந்து ஒன்பது பெரிய வேள்விகளை வேட்பித்து பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாயினார் — அதாவது பாலைக் கௌதமன் என்னும் பார்ப்பனப் புலவரும் அவர் மனைவியும் சுவர்க்கம் புகுந்தனர் — இதனைப் பதிற்றுப் பத்து என்னும் சங்க நூலில் - மூன்றும் பதிகத்தில்-

பல்யானை செல்கெழு குட்டுவனை பாலைக் கௌதமனார் பாடினார். பத்துப்பாட்டு; பாடிப்பெற்ற பரிசில் நீர் வேண்டியது கேள் என்ன யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டுமென பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட்பித்து பத்தாம் பெருவேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்

— என்று எழுதப்பட்டிருக்கும் குறிப்பாலும் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்,

“ நான் மறையாளன்
செய்யுட் கொண்டு
‘மேல்நிலையுலகம்’
விடுத்தோன் என்று

பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாராட்டுவதனாலும் அறிகிறோம்.

இங்கெல்லாம் நாம் என்ன எண்ணுகிறோம்? வீரம் மிக்க தமிழ்வேந்தர்கள் — எதிரிகளுடன் போர்க்களத்தில் நடத்தும் வேள்விகளைத்தான் வேள்வியாகக் கருதினார்கள், மதித்தார்கள்.

ஆனால் வேறு பண்பாடுடையவர்கள் — தங்கள் பண்பாட்டின்படி யாகங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டால், பெருந்தன்மையுடன், கேட்டது இல்லை என்று சொல்லுதலையே அறியா வள்ளல் உள்ளம் படைத்தோராதலால் யாகங்கள் செய்திட வேண்டுமென்று கேட்டாலும், கேட்டது வழங்கினர்!

கிரிப்பிள்ளையை அவசரப் பட்டுக் கொன்றுவிட்ட பார்ப்பனியின் கர்மத்தைப்போக்க- அவர்கள் பண்பாட்டின்படி பெரும் பொருட் செலவு செய்து — யாகம்போன்றவைகளை நடத்த — உதவினான் கோவலன் என்று இளங்கோ —சிலப்பதிகாரத்தில் எழுதவில்லையா?

இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் சங்க இலக்கியங்களில் — தொல்காப்பியத்தில் ஆங்காங்கே காணப்பட்டாலும் — அடையாளந் தெரியாத அளவுக்குப் பாலில் தண்ணீர் கலந்தது போலவா. எள் எண்ணெயில் கடலை எண்ணெய் கலந்ததுபோலவோ கலந்திடவில்லை:

மணமிக்க மல்லிகை மலர் மாலையிலே மணமற்ற ஆடு தொடா இலையை வைத்துத் தொடுத்ததுபோல் அரிசியில் கல்லைக் கலந்ததுபோல் இன்னமும் இருக்கின்றன!

அவற்றையெல்லாம் தொகுத்துப்பார்க்கிற முயற்சியிலேதான் தினமணி ஈடுபடுகிறதேயல்லாமல் அது போக நினைக்கிற இடத்துக்குப்போக முடியாது!

(அடுத்த இதழில் முடியும்)

ஒரு கேள்வி - பதில்!

கே: மது அருந்த அனுமதி (Permit) வைத்திருப்பவர்கள் அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கலைஞர்களிடம் இந்த முதலமைச்சர் கேட்டிருக்கிறாரே, உங்கள் நிலை என்ன?

ப: இந்த முதலமைச்சர் என்ன? ஆண்டவனே வந்தாலும் அவனிடம் இன்னொரு ‘பர்மிட்’ கேட்பேன் நான். ஒருவனுக்குப் பைத்தியம் பிடித்தால் மதுவிலக்குக் கொண்டு வருவான். இன்னொருவனுக்குப் பைத்தியம் பிடித்தால் மதுவைக் கொண்டு வருவான். இந்த மடையர்களுக்கு நானும் கட்டுப்பட வேண்டுமா என்ன? உங்கள் முதலமைச்சரை இன்னொரு உத்தரவு போடச் சொல்லுங்களேன். ‘ஒரு காதலிக்குமேல் வைத்திருப்பவர்களெல்லாம் அரசாங்கத்தாரிடம் ஒப்படையுங்கள்’ என்று.

- 1977 நவம்பர் ‘கண்ணதாசன்’ இதழ்

(கே. ஏ. பி ஜாபருல்லாகான் என்பவர் கேட்ட கேள்விக்கு ஆஸ்தானக் கவிஞர் அளித்த பதில்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றிலே பாக்குக் கடை வைத்துக் கொண்டிருந்தாள் அவள்கூட பொன்னையாவைப் பார்த்ததும் கடைக்குள் ஓடிப்போய் விட்டாள்

“பாமா”

“..........”

‘என்னைத் தெரியலையா பாமா? நான்தான் பொன்னையா! கடை வாசலில் பிச்சைக்காரனைப்போல் நின்று கூப்பிட்டான்

பாமா கடைக்குள்ளிருந்து வெளியில் வரவில்லை அவள் புருஷன் தூங்கிக் கொண்டிருந்தவன் கடைக் குள்ளிருந்து வந்து விவரம் கேட்டான் அதற்குப் பிறகு பாமா உள்ளிருந்தபடியே பேசினாள்.

பாமா. என் தங்கச்சி என்ன ஆச்சி?” பொன்னையா கண்களில் நீர்த் திரையிடக் கேட்டான்.

நீங்க போன மறு மாசத்திலே இங்கே ஒரு கூத்து வச்சாங்க! அதிலே உங்க தங்கச்சி பாடுச்சு கூத்துக்காரங்க அன்னைக்கே அதைக் கூட்டிப் போயிட்டாங்க!” என்று பாமா ஒளிந்து கொண்டே சொன்னாள். அதற்குப் பிறகு பொன்னையா அந்த ஊரிலே தங்கவில்லை நேராக மதுரைக்கு வந்து விட்டான். அப்போது தான் வைகை அணை வேலைத் தொடக்கத்திற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. பொன்னையா அதில் கூலியாகச் சேர்ந்துவிட்டான். இடையிடையே தங்கையின் நினைவுவரும். வரும்போதெல்லாம் கண்களைக் கசக்குவான். கவலையை மறப்பதற்கு அவன் உழைப்பில் உற்சாகம் காட்டுவான். கொஞ்சகாலத்திற்குள் பொன்னையா கொத்தனாராகி விட்டான். அவனது முன்னேற்றம் செந்தூரானுக்கு வயிற்றில் நெருப்பைக்கொட்டியது. அடிக்கடி இருவருக்கும் சச்சரவுகள் ஏற்பட்டன ஒருநாள் தகராறில் செந்தூரான் முதலில் கை நீட்டிவிட்டான். பொன்னையாவுக்கு வந்ததே பார்க்கலாம் வெறி! ஓங்கிய கையை மடக்காமல் ஒருகுத்து விட்டான். செந்தூரானின் முன் பல் தரையில் விழுந்து விட்டது. தொழிலாளிகள் அதற்கொரு ‘நீதி விசாரணை’ நடத்தி செந்தூரான் முதலில் கை நீட்டியது குற்றமென்றாலும் அவனுக்குத் தங்கப் பல் கட்டும் செலவை பொன்னையா கொடுப்பதுதான் முறை என்று கூறினார்கள் பொன்னையா அதற்காக ஐம்பது ரூபாய் கொடுத்தான்.

அதற்குப் பிறகு இருவருக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தது செந்தூரான் பொன்னையாவைப் பழிவாங்கத் திட்டமிட்டு பொன்னையாவின் கூலிப்பணத்தை மோசம் செய்ய எண்ணினான். இதையறிந்த பொன்னையா சுடலையின் உதவியுடன் செந்தூரானைத் தீர்த்துவிட முடிவு கட்டிவிட்டான்.

செந்தூரான் திங்கட்கிழமை தோறும் அணையின் மேல் பகுதியை பாலத்தில் ஏறிப்பார்ப்பது வழக்கம். அன்றைய தினம் பொய்ச்சாரம் ஒன்று கட்டுவித்து அதன் மூலம் செந்தூரானைத் தொலைத்துவிட எண்ணி பொன்னையா சுடலையிடம் பேசினான் இதைக் கேட்டுக்கொண்டிருந்த செந்தூரான் அந்தப் பொய்ச்சாரத்தில் செண்பகஞ்சேர்வையை ஏறவைத்துத் தீர்த்துவிட்டான் செண்பகஞ்சேர்வை தொலைந்தால் சகுந்தலை எளிதில் மணம் செய்து கொண்டுவிடலாமென எண்ணினான் செந்தூரான். [தொடரும்]

அழகிரி நெருப்பே வாழி!

(தென்னகன்)

அண்ணலே! தமிழர் நெஞ்ச
ஆழ்கடல் முத்தே வானக்
கொண்டலாய்க் கருத்து மாறி
கொட்டியே அந்நாள் மக்கள்
மண்டையில் அறிவு நாற்றை
மாண்புடன் வளர்த்த தூயா!
அண்டிய மடமை தீய்த்த
அழகிரி நெருப்பே! வாழி!

கூட்டத்தில் பேசி விட்டுக்
குருதியைக் கொப்ப ளித்தும்
வாட்டத்தை அடையா உன்றன்
வரலாற்றை நினைக்கும் போதே
ஊட்டத்தைப் பெறுவோம்; எங்கள்
உணர்வென வாழும் நீதான்
காட்டிய பகையை வெல்வோம்;
கலைஞரின் துணையாய் நின்றே!

தமிழின எழுச்சிக் காகத்
தாங்கொணுத் துயரம் உன்னை
அமிழ்த்திய போதும், அண்ணன்
அழகிரி சாமி யே நீ
கமழ்ந்திடும் கொள்கைப் பற்ருல்
கலங்கிடா துழைத்தாய்; நாங்கள்
இமையென நீதான் காத்த
இனத்தினை காப்போம்; ஆணை!

கவர்ச்சியின் ஆட்டம் இன்று
கடையினை விரித்தே மக்கள்
தவறினுல் வணிகம் செய்யும்;
தமிழ்குலத் தூக்கம் நீக்கின்
அவலங்கள் கோடி கோடி
அழித்திட வருமா ஞலும்
துவைத்துமே மிதிப்போம்; உன்றன்
தொண்டினை வெல்ல வைப்போம்!

கோட்டையில் அரிதா ரத்தின்
கொலுவினைத் தமிழர் கண்டார்;
நாட்டவர் தன்மா னத்தை
நடிப்புக்கே அடகு வைத்தார்!
வேட்டென முழக்கிச் சொல்லை
வேலென விடுக்கும் பட்டுக்—
கோட்டையின் சிங்க மே நீ
குதித்தொரு முறைவா ராயோ!

அழகிரி மறவா! உன்மேல்
ஆணைதான் இட்டோம்; அன்னை
மொழியினைக் காப்போம்! மூட
முக்கினை அறுப்போம்; நாட்டை
விழியென நினைப்போம்; இந்நாள்
வீழ்ந்திடும் இனத்தை நானை
எழுந்திட வைப்போம்! கோடி
இன்னல்கள் வரினும் மாருேம்!

உலகுள தமிழர் நெஞ்சில்
உலவிடும் தலைவர்; மானக்
கலைஞரின் வழியில் சென்று
கழகமாம் கோட்டை காப்போம்!
வலையினை விரித்த மாயை
வாழ்வினைக் கொள்கை யாலே
இலையெனச் செய்வோம்! வாழ்வின்
இன்பமும் கொள்கைச் சாவே!

M.K. TRADERS MADRAS-600024

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

'யோகி'கள் - 'பாபா'க்கள் - 'சுவாமிஜீ'க்கள் -

ஒரு படப்பிடிப்பு!

[2]

ரிஷிகேசத்திற்கு அருகாமையில் இருக்கும் 'சுவிஸ் காட்டேஜும்' — 'பாரதி' ஆசிரமும் மிகவும் பிரபலமானவைகள்.

'சுவிஸ் காட்டேஜ்' பிரமானந்த பாபாவுக்குச் சொந்தமானது ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 'மரியா சுண்டர்' என்ற சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பெண் அந்த ஆசிரமத்தைக் கட்ட 'பாபா'வுக்கு ஏராளமான பணம் வழங்கினுர். நன்றி மறவா பாபாவும் தமது ஆசிரமத்திற்கு 'சுவிஸ் காட்டேஜ்' என்றே 'நாமம்' சூடிவிட்டார்...!

பாபா, அயல் நாட்டுப் பணக்கார 'யாத்ரீகர்'களிடம் அன்பு ததும்பப் பேசுவார்; இந்தியாவின் வயிறு ஒட்டிய, கடவுளை நம்பிக் காலத்தை ஓட்டும் ஏழை யாத்ரீகர்களிடம் பேசும்போது மட்டும் எரிந்து விழுவார்!

பத்திரிகையாளர்களோ, 'யாத்ரைக்கு' வராமல் வெறும் பொழுதுபோக்கிற்காக வருபவர்களோ பாபாவிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினுல் உடனே அவர் முள்ளின் மீது அமர்ந்திருப்பவர்போல் ஆகிவிடுவார்; இரண்டு நிமிடங்களுக்குமேல் பொறுமையாக அமர்ந்து 'சந்தேகம்' தீர்க்க மாட்டார். உடனே 'சட்'டென்று எழுந்து உட்பக்கமாகச் சென்று மறைந்து விடுவார்

'பாபா'வின் ஆசிரமத்தினுள் அழகிய, இளமையான அயல்நாட்டுப் பெண்கள் பலர் இருக்கிருர்கள். வாளிப்பான உடற்கட்டுடன் ஏறத்தாழ அரை நிர்வாணக் கோலத்தில் அங்கிருக்கும் மரநிழல்களின் கீழ் அப்பெண்கள் உட்கார்ந்து கொண்டும், படுத்துக்கொண்டும் 'கஞ்சா' போதையில் தம்மை மறந்துபோயிருப்பார்கள். அந்த அயல்நாட்டுப் பெண்களிடம் 'பாபா காட்டும் பரிவு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. (இதே 'பாபா,' சிக்குப்பிடித்த தலையோடு, அழுக்கடைந்து கிழிந்துபோன சேலை அணிந்து வரும் இந்தியாவின் ஏழைப் பெண்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்!) அயல்நாட்டுப் பெண்களிடம் அவர்கள் தங்குவதற்காக நாளொன்றுக்கு 'பாபா' வசூலிக்கும் தொகை வெறும் இரண்டு ரூபாய் மட்டுமே

'பாபா'வின் ஆசிரமத்திலிருந்தவர்களின் பொருட்கள் அண்மையில் சிலரால் கொள்ளையடிக்கப் பட்டன; அது குறித்து அவர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் செய்யவில்லை—ஏனோ தெரியவில்லை, கப்சிப் என்று இருந்துவிட்டார்.

'சுவிஸ் காட்டேஜு'க்கு அருகிலிருக்கும் 'பாரதி ஆசிரமம் 'பாபா' பாரதிக்குச் சொந்தமானது; உயர்ந்த மதிர்சுவரும், இரும்பு வாயிற்கதவும் கொண்ட இந்த ஆசிரமத்தினுள் காவலுக்காக முரட்டுத்தனமான 'மேல்ஜாதி' நாய்கள் நான்கு இருக்கின்றன; இங்கே யாரும் புகைப்படம் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை; இங்கிருக்கும் அறைகள், ஒரு 'நவீன உயர்தர உணவு விடுதியிலிருக்கும் அறைகளைவிட அதிக வசதிகள் கொண்டவை; 'எந்த போதைப் பொருளையும் என் ஆசிரமத்தினுள் நான் அனுமதிப்பதில்லை என்று வெளி ஆட்களிடம் 'பாபா' பாரதி கூறுகிருர்; ஆனுல் அவருடைய ஆசிரமத்தின் உள்ளே—மர நிழல்களின் கீழ்—ஆண்களும், பெண்களும் சிகரெட்டின் உள்ளிருக்கும் புகையிலைத் தூளைக் கொட்டிவிட்டு 'கஞ்சா'வையோ 'சரஸ்'சையோ (கஞ்சாவைவிடப் போதைவாய்ந்தது) இலாவகமாக சிகரெட்டினுள் திணிப்பதைப்பார்க்கலாம் எல்.எஸ்.டி மாத்திரைகளும், 'பெத்தடின் ஊசிகளும்கூட அங்கு அனுமதிக்கபபடுவதாகச் சொல்லப்படுகிறது.

மகேஷ்யோகிக்கு இணையாக 'பிரபலம் பெற்றவரின் பெயர்—சுவாமி கைலாசானந்த். பதின்மூன்று 'மாடிகள்' கொண்டது இவருடைய ஆசிரமம்! இதனுடைய உச்சியை பல மைல்களுக்கப்பாலிருந்தே காணலாம். ஐந்து 'ஸ்டார்' மதிப்புடைய ஆடம்பர ஓட்டலும் ஆசிரமத்தின் அருகே 'சுவாமி கட்டிமுடித்துள்ளார்:

அதுமட்டுமல்ல—

வாடகைக்கு விடுவதற்கென்று ஏராளமான கடைகளையும் கட்டியுள்ளார். அவைகள் இப்போது இழுத்து மூடப்பட்டுள்ளன.

1966-ஆம் ஆண்டு 'சுவாமி' கைலாசானந்த் 'தேச விரோத' செயலில் ஈடுபட்டதற்காகக் கைது செய்யப்பட்டார்; அப்போது அவரிடமிருந்து சக்தி மிகுந்த ஒரு 'டிரான்ஸ்மீட்டர்' கருவி பறிமுதல் செய்யப்பட்டது; அதன் பிறகு 'மர்மமான' சூழ்நிலையில் அவர் விடுதலை செய்யப்பட்டார். சுவாமி அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வருவார்; 'யோகி குப்தா' என்ற மாற்றுப் பெயரில் அமெரிக்கக் குடிமகனுகவும் தன்னைப் பதிவு செய்துள்ளார் இவர்.

பழனி. சித்தார்த்தன்

மீண்டும் 1973-ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி மோசடி குற்றத்திற்காக சுவாமி விசாரிக்கப்பட்டார். அப்போது அவர் கைது செய்யப்பட இருந்தது. சில செல்வாக்கு மிக்க அரசியல் தலைவர்களால் அதுவும் தடுத்து நிறுத்தப்பட்டது.

மறுபடியும் 1975-ஆம் ஆண்டு 'சுவாமி' துப்பறியும் துறையினரால் விசாரிக்கப்பட்டார்—அவரிடம் பணியாற்றிய இரண்டு ஊழியர்கள் 'மர்மமான' முறையில் கொலை செய்யப்பட்டிருந்தார்கள்! அக்கொலையில் 'சுவாமி'க்குப் பங்கு இருப்பதற்கான ஆதாரம் கிடைத்திருந்தது. மீண்டும் சிலருடைய ஊடுறுவலால் அந்த வழக்கும் கைகழுவப்பட்டது. சுவாமி கைலாசானந்தமும் மகேஷ் 'யோகி'யைப்போல் இப்போது இந்தியாவில் இல்லை.

—இன்னும் ஏராளமான ஆசிரமங்களும், 'புண்ணிய ஸ்தலங்களும் ரிஷிகேசத்தில் உண்டு. 'யோகி'களும், பாபா'க்களும், 'சுவாமிஜீ'க்களும் கேட்க ஆளின்றி 'தனிக்காட்டு ராஜாக்களாக' ஆசிரமங்களில் 'தர்பார்' நடத்தி வருகிருர்கள்.

இந்திய யாத்ரீகர்களைவிட அயல்நாட்டு 'யாத்ரீகர்களைத்தான் இந்த இடம் அதிகமாகக் கவர்ந்திருக்கிறது. ஆசிரமங்களின் உள்ளே என்னென்ன 'சட்டமீறல்கள்' நடக்கிறதென்று காவலர்களாலோ, புலனுய்வுத் துறையினராலோ முழுவதும் கண்டுபிடிக்க இயலவில்லை!

உள்ளூர் 'குற்றவாளிகள்' என்றுல் அடையாளம் கண்டு கொள்ள முடியும், அயல்நாட்டவர்களிடையே 'ஒளிந்து' வரும் குற்றவாளிகளை எப்படிக் கண்டு பிடிப்பது? காவல் துறையினருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை இதுவே!

ஆசிரமங்களில் வைக்கப்பட்டிருக்கும் பதிவுப் புத்தகங்கள் உண்மையைக் கூறுவதில்லை. புதிதாக அயல்நாட்டிலிருந்து எத்தனை பேர்கள் வந்திருக்கிருர்கள், அவர்கள் பெயர்களென்ன, செய்யும் தொழிலென்ன—போன்ற விவரங்களை அப்பதிவுப் புத்தகங்கள் மறைத்து விடுகின்றன

ரிஷிகேசத்தின் உள்ளும் சுற்றுப்புறத்திலும் கற்பழிபுகள்—கொலைகள்—கொள்ளைகள்—'பிக்பாக்கெட்டுகள்—வாரம் தோறும் 'மலிந்து' வருகின்றன!

கடந்த மாதம் 'மலை'யேறிக் கொண்டிருந்த ஒரு யாத்ரீகர் குழுவை ஐந்து கொள்ளையர்கள் சூறையாடினுர்கள்;

கொள்ளையர்கள் 'யாத்ரீகர்'களின் பொருட்களைப் பறித்ததோடு நில்லாமல் ஆண்களை மரங்களில் கட்டிப் போட்டு—பெண்களை மிருகத்தனமாகக் கற்பழித்திருக்கிருர்கள்!

பெரும்பான்மையான அயல் நாட்டவர்கள் ரிஷிகேசத்தையே 'சுற்றிச் சுற்றி' வருவதன் நோக்கம்தான் என்ன? தாஜ்மகாலையோ, அஜந்தா ஓவியங்களையோ, எழில்கொஞ்சும் காஷ்மீரத்தையோ, பண்பாடு தவழும் தமிழகத்துச் சிற்பங்களையோ ரிஷிகேசத்துக்கு வரும் அயல்நாட்டவர்கள் பார்க்க விரும்பாததன் காரணம் என்ன?

'யோகி'கள், 'பாபா'க்கள்' 'சுவாமிஜீ'க்கள்—ஆகியோரின் ஒத்துழைப்பு இல்லாமல் ரிஷிகேசத்தில் அலைந்து கொண்டிருக்கும் அயல்நாட்டவர்களிடையே 'ஒளிந்து' வாழும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க இயலாது என்று காவல் துறையினர் கருதுகிருர்கள்—

அதற்கு முன்—

'யோகி'கள், 'பாபா'க்கள் 'சுவாமிஜீ'க்கள் என்ற பெயர்களில் பொய்வேடமிட்டுத் திரியும் உள்ளூர் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டாமா? ★

கேட்டது-போனஸ்-கிடைத்தது துப்பாக்கிக் குண்டுகள்!

ரொட்டித் துண்டுகள் கேட்ட ரஷ்ய மக்களுக்குத் துப்பாக்கிக் குண்டுகளை வழங்கினன் அன்றைய ஜார்மன்னன். 'போனஸ்' கேட்ட தொழிலாளர்களுக்குத் துப்பாக்கக் குண்டுகளை வழங்கியுள்ளது. குவாலியரிலிருக்கும் இன்றைய 'ஜியாஜீரோ காட்டன் மில் நிர்வாகம.

1975—76-ஆம் ஆண்டுக்கான போனஸ் தொகையைக் கேட்டுக் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக 'ஜியாஜீரோ காட்டன் மில்' தொழிலாளர்கள் கோரிக்கைகள் விடுத்து வந்தார்கள். நிர்வாகம் அவைகளைக்காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. வேறுவழியின்றி வேலைநிறுத்தம்செய்வதென்று தொழிலாளர்கள் முடிவெடுத்தார்கள். அவர்களிடம் இருக்கும்'ஒரே ஆயுதம்' அதுதானே!

மேமாதம் பன்னிரண்டாம் தேதி இரவு பத்து மணிக்கு 'மில்' வாயிற்கதவருகே கூடி 'போனஸ்' வேண்டுமென்று கேட்டு ஒன்றுபட்டு உரத்த குரலெழுப்பினர்கள்; 'வேலை நிறுத்தம்' என்ருல் புறமுதுகு காட்டுவதையும் அதன் மூலம் கிடைக்கும் 'சலுகைகள் என்ருல் அதைப் பெறமட்டும் ஓடோடி வருவதையும் வாடிக்கையாகவும். வழக்கமாகவும் கொண்ட சில தொழிலாளர்கள் மட்டும் மில்'லினுள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களையும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளும்படி மன்ருடிக் கேட்டுக்கொண்டே இருந்தார்கள் வெளியே கூடியிருந்த பெரும்பான்மையான தொழிலாளர்கள். திடீரென்று தெரு விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டன; 'மில் இருக்கும் பிர்லாநகர் வட்டாரம் முழுவதும் இருளில் மூழ்கி விட்டது; மில்லின் வாயிற் கதவுகள் திறக்கப்பட்டவுடனேயே—யாரும் எதிர்பாராத நேரத்தில் — சரமாரியாகத் துப்பாக்கிக் குண்டுகள் தொழிலாளர்கள் மீது மழைச்சாரல்கள் போல்விழுந்தன! அவர்கள் மீதுசில கைவெடிகுண்டுகளும் வீசப்பட்டன. நிர்வாகத்தினரின் எதிர்பாராத இந்தத் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தொழிலாளர்கள் தடிகளாலும். இரும்புக் கம்பிகளாலும், செங்கலாலும் போராடினர்கள்!

●●●●●●●●●●●●●

சண்முகபுரம் பாலகிருட்டிணன்

●●●●●●●●●●●●●●

கூட்டத்தைக் கலைப்பதற்காகக் காவலர்கள் இருபத்திரண்டு கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசினர்கள். மறுநாளே (மே 13) அங்குஊரடங்குச்சட்டம் (யாரும் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது) பிறப்பிக்கப்பட்டது.

இருநூறு தொழிலாளர்களுக்குமேல் படுகாயம் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது; ஆனல் மருத்துவவிடுதியில் அனுமதிக்கப்பட்டவர்களோ ஐம்பது பேர்தான்.

வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை நிர்வாகம் திட்டமிட்டுத் தாக்கியது என்று அனைத்துக் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்களும் கூறுகிருர்கள். காயமடைந்த தொழிலாளர்களில் சிலர் மில்லின் ஜெனரல் மேனேஜர் மீதும் பாதுகாப்பு அதிகாரிகள் மீதும் ஒரு புகார் கொடுத்தார்கள். ஆனல் அதைப் பதிவு செய்து கொள்ளக்காவலர்கள் மறுத்து விட்டார்கள்.

மத்தியப் பிரதேசத்திலிருக்கும் மில்களிலேயே மிகப்பெரியது இந்த ஜிபாஜீரோ' காட்டன் மில்தான். (ஜே. சி. மில்) இங்கு 12,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிருர்கள். மில்லின் இன்றைய ஜெனரல் மேனேஜரான சர்தார்சிங் இந்திராவின் ஆதரவாளர்; தொழிற்சங்கப் போட்டிகளின் போதெல்லாம் அவர் வீடுவீடாகச் சென்று INTUC-க்கு (இந்திரா காங்கிரசின் ஆதரவு பெற்ற தொழிற் சங்கம்) ஓட்டுப் போடும்படித் தொழிலாளர்களைக் கேட்பதுவழக்கம்.

தொழிலாளர்கள் 'போனஸ்' கேட்ட போது மில் நிர்வாகம் நட்டக் கணக்குக் காட்டியது. அதைஏற்றுக்கொண்ட 'லேபர் கமிஷனர் போனஸ் கேட்டு வேலை நிறுத்தம் செய்ய வேண்டாம் என்று 'உபதேசம்' செய்தார். மில் ஆண்டுதோறும் காட்டுவது நட்டக் கணக்குத்தான். ஆனல் உண்மை என்ன வென்ருல் அதிக இலாபம் ஈட்டும் இந்தியாவிலிருக்கும் மிகப் பெரிய மில்களில் ஜே சி. மில்லும் ஒன்று!

அப்படியே பார்த்தாலும்—

1965-ஆம் ஆண்டிலிருந்தே நட்டக் கணக்குக் காட்டும் மில் அப்பாதெல்லாம் போனஸ் தருவதை நிறுத்தவில்லை. இப்போது மட்டும் அதற்கென்ன 'கேடு' வந்ததாம்; எனவே லேபர் கமிஷனரின் உபதேசத்தைப், புறக்கணித்த பிற தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக முன் கூட்டியே நோட்டீஸ் விட்டன.

அப்போதும்—

INTUC தொழிற் சங்கம் மட்டும் லேபர் கமிஷனரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு வேலை நிறுத்தம் வேண்டாம் என்று ஒற்றைக் குரல் எழுப்பியது. அறிவித்தபடியே வேலை நிறுத்தம் செய்தார்கள் தொழிலாளர்கள்,

அப்போதுதான்—

இந்தியாவின் பொருளாதாரத்தையே 'ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கும்' சிலரில் ஒருவரான பிர்லாவின் நிர்வாகம் தொழிலாளர்கள் மீது துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்திருக்கிறது.

இந்திரா காங்கிரசைத் தவிர பிற கட்சிகள் ஜெனரல மேனேஜரைக் கைது செய்யும்படி அரசை வலியுறுத்தி வருகின்றன. மத்தியப் பிரதேசத்து அமைச்சர்கள் அடிபட்ட தொழிலாளர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி. தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்கள்.

ஜனதாக் கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளரான ரகுதாகூரும். விஷ்ணு தத்திவாரி என்ற ஜனதா எம். எல். ஏயும் சேர்ந்து ஜே சி. மில்லை நாட்டுடைமையாக்கும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

திட்டமிட்டுத் தாக்குதல் நடத்திய நிர்வாகத்தினரைக் கைது செய்வதற்குப் பதிலாக.

நூற்று நாற்பது தொழிலாளர்கள் மீது 144 C R. P. C. பிரிவின் கீழ் வழக்குப் போட்டுள்ளார்கள் காவலர்கள்.

ஜனதா ஆட்சிக்கு வந்த பிறகு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதும, தொழிலாளர்கள்மீதும் தொடர்ந்து தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

இன்றைய ஜனதா அரசு தொழிலாளர் விரோதப் போக்கை கடைபிடித்து வருகிறது என்ற பழியிலிருந்து அது மீளவேண்டுமானல் முதலாளிகளின் 'அட்டகாசங்களைத் தடுத்து நிறுத்தி தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும்.

அஞ்சாநெஞ்சன்...]

[5 ம் பக்கத் தொடர்ச்சி

பாற்றும் காவலனுகவும் திகழ்ந்தார். நாகரிகத்தைக் காட்டும் கிராப்புத் தலையிலேயே சில முடிகள் நீளமாக வளர்ந்து உச்சிக் குடுமியும் ஒட்டிக்கொண்டிருக்கும். திருமண் நாமம் தரித்த நெற்றி; நாராயணனின் திருநாமத்தை அடிக்கடி உச்சரித்தவாறு வாய்!

அத்துடன் விட்டாரா? கைராட்டை சுற்றியிருக்கிருர்; தக்கிளியில் நூற்றிருக்கிருர்; பாரத மாதா சங்கம் வைத்துத் தேசியத்திருப்பணியில் ஈடுபட்டிருக்கிருர்.

இப்படி 'தெய்வீகக்'கோலமும், 'தேசிய திருக்கோலமும் பூண்டிருந்துதான் தமது பொதுவாழ்வைத் தொடங்கினர் அழகிரி. இதற்கிடையே அவர்தம் சொந்தவாழ்க்கைக்கு வழி என்ன?

கூட்டுறவு இயக்க வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு பாடுபட்ட வழக்கறிஞர் வேணுகோபாலரின் உதவியால் நகரக் கூட்டுறவு வங்கியில் ஓர் எழுத்தர் வேலை கிடைத்தது. அழகிரிக்கு அந்த வேலையிலும் நீண்ட நாள் அவர் இருக்கவில்லை. வங்கியின் இயக்குநர்களிடையே மூண்ட பிணக்குகளின் விளைவாக, அந்த வேலையை விட்டு நீங்கினர்.

வங்கியில் வேலை பார்த்து வந்த காலத்தில், வைதீக வைணவரான வெங்கடசுப்பா (நாயுடு) என்பரின் மகளான எத்திராஜம்மாளை அழகிரி வாழ்க்கைத் துணைவியாக ஏற்ருர். பட்டுக்கோட்டையை அடுத்த காமாட்சிநாயக்கன்பாளையத்தில் உள்ள மாமனுர் வீட்டிலேயே குடியேறி இல்லறம் நடத்தத் தொடங்கினர் அழகிரி. அவ்வூரில் உள்ள அழகிரியின் உறவினர்கள் அனைவரும் பழுத்த வைணவ வைதிகர்கள் ஆவார்கள். அவர்களிலே ஒருவராகத்தான் அழகிரியும் திகழ்ந்தார்.

சிறிய தகப்பனரின் அரசியல் கருத்தில் தான் அழகிரிக்கு உடன்பாடு இல்லையே தவிர, பார்ப்பனீய எதிர்ப்புப் போராட்டத்தில் அவருக்கு முழு உடன்பாடு உண்டு. எனவே, 'பார்ப்பனரல்லாதாரர் காங்கிரஸ் வாலிபர்' சங்கம் என்ற ஓர் அமைப்பை நிறுவினர்.

அந்த நேரத்தில்தான் வ வெ சு ஐயர் நடத்திய சேரன்மாதேவி குருகுலத்தில் உயர் சாதி வெறி தாண்டவமாடியதை எதிர்க்கும் போராட்டம் உச்சநிலையடைந்தது.

அப் போராட்டத்தின் தளநாயகராகத் திகழ்ந்த டாக்டர் வரதராசலு (நாயுடு) தமது 'தமிழ்நாடு' வார இதழில் பார்ப்பனிய ஆதிக்கத்தை எதிர்த்துக் கடுமையாக எழுதி வந்தார். அதன் விளைவாக அழகிரியின் உள்ளத்தில் பார்ப்பனிய எதிர்ப்புணர்ச்சி வேரூன்றி மேலோங்கி நின்றது.

இதுதான் அழகிரியின் பொது வாழ்வில் ஏற்பட்ட திருப்பம்! இந்தத் திருப்பத்திற்கு யார் காரணம்? ஈரோட்டுத் தந்தை பெரியாரா? இல்லவே இல்லை! பிறகு யார்? அவர்தான் ஒரு மாரியம்மன் கோவில் பூசாரி!

அந்தச் சுவையான நிகழ்ச்சியை அடுத்த இதழில் படிக்கலாம்.

மீண்டும் கழகத் தலைவராகக்
கலைஞர் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு
எங்கள் நல்வாழ்த்துக்கள்!

ஏசடியன்
போட்டோ கிராபிக்
17, எழும்பூர் நெடுஞ்சாலை
சென்னை - 60008.

எங்களிடம் கலைஞரின் 55ஆம் ஆண்டு பிறந்த நாள் புகைப்படங்களும், கழகத்தலைவர்சென்னையில் கலந்து கொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகளின் படங்களும் கிடைக்கும்.

கடை:33213 இல்லம்31922
நாம்நாடுவோர்தவறுமல்நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை
தனிச்சிறப்பு:சிலேபி,தெக்கத்திமிட்டாய்,அதிரசம்,
இனிப்புசேவு,பக்கவடா,மிக்சர்,முறுக்கு,கடலை
நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே.தேவசகாயம்
கிளைகள்: 26.மேலமாசி வீதி, 70.சுவாமிசன்னதி
12 அழகர்கோவில் சாலை,72.C.L.வுன்ஹால்ரோடு,மதுரை.

'விகடனு'க்கு கண் பிடரியிலா?

நாங்கள் ஆட்சிக்குவந்தால் விவசாயிகளுக்கு போனஸ்! தபாலாபீசில் கடன்! கார்டு கவர் விலைகுறைப்பு' பல்லாயிரக் கணக்கான நியாயவிலைக் கடைகளை திறப்போம்!

இலஞ்ச ஊழலை அடியோடு ஒழிப்போம்!

நெல் கொள்முதல் விலையைக் கூட்டுவோம்!

மந்திரிகளைக் கீழ் மட்டத் தொண்டர்களே தேர்ந்தெடுப்பார்கள்!

தவறு செய்யும் அமைச்சர், எம். எல். ஏ., எம். பி.க்களை மக்கள் விரும்பினால் திருப்பி அழைத்துக் கொள்ளும் உரிமை!

ஆடம்பரத்தைத் தவிர்ப்போம்; புகழ்பாடும் வளைவுகள் இருக்காது; இரவைப் பகலாக்கும் மின் விளக்குகள் (குழல் விளக்குகள்) மற்றும் மலர்க் கிரீடமிருக்காது!

-:குடியேற்றம் ஏ. சுப்பிரமணியம்:-

பெண்களுக்குச் சொத்துரிமை வாங்கித்தருவோம், இப்படிப்பட்ட வாக்குறுதிகளை எல்லாம் மேடைக்கு மேடை முழங்கிய பின்னர் குறைந்த பெரும்பான்மையுடன் அமைச்சரவை அமைத்து அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டவர்கள் இப்போது ஓராண்டு நிறைவு விழா கொண்டாடுகிறார்கள். மக்களுக்கு விரோதமான செயல்கள் பலவற்றைச் செய்து விட்டுச் சாதனை எனக் கூறிக்கொள்வதை வேதனையுடன் தாங்கிக் கொண்டிருக்கிறார்கள் மக்கள். இந்நிலையில் 'ஆனந்தவிகடன்' ஓராண்டுச் சாதனை என்ற பெயரால் ஒரு தலைப்பங்கமே தீட்டியிருக்கிறது. வடக்கே குழப்ப நிலையிருக்கிறதாம் இங்கு மட்டும் பூரண அமைதியுடன் செயல்படுகிறதாம் ஆட்சி! 'சபாஷ்' போட்டுப் பாராட்டிக்கொள்ளும் வேளையில் 'ஆனந்த விகடன்' கண்களுக்கு கடந்த ஓராண்டு காலமாக எம். ஜி. ஆர். ஆட்சி அதிகார 'துஷ்பிரயோகம்' செய்வது கண்ணில் படாதது வேடிக்கைக்குரியது வெளிக்குத் தெரியாமலிருக்க வேண்டுமானால் பட்டுத்திரையிட்டு மூடி இருக்கலாம் என்றாலும் 'எக்ஸ்ரே' கண்ணாடி போட்டுப்பார்க்கும் 'ஆனந்தவிகடனுக்கு இது தெரியாமல் போனதுதான் வியப்பாகும்! விகடனுக்கு இப்போது கண் பிடரியிலிருக்கிறதா?

கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளில் காமராசர், பக்தவத்சலனார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் ஆகியோர் முதலமைச்சர்களாக இருந்திருக்கின்றனர். தற்போது ஆளும் கட்சியிலிருக்கும் எம். எல். ஏக்களைவிட அதிகமாகவே அப்போது இருந்திருக்கின்றனர். அதிகப்படியான பெரும்பான்மைப்பெற்றிருந்த அந்த மந்திரி சபையில் கூட இப்போது இருக்குமளவிற்கு அமைச்சர்கள் இல்லை எனலாம்.

'மக்களிடமிருந்து வசூலிக்கும் வரிப்பணத்தில் ஒவ்வொரு காசையும் கணக்குப் பார்த்துச் செலவழிப்பேன் எனப் பசப்பிய புனிதரின் மந்திரி சபையில் பதினெட்டு அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர்.

அவர்களிலே ஒருவர் டில்லியிலே எம். பி; மாநிலத்திலே அமைச்சர்! "எங்களுக்கு இல்லையா?" எனக் கேட்டுப் போர்க் கொடி உயர்த்திய சில எம். எல். ஏக்களை சரிக்கட்ட மந்திரிச் செயலர் என்னும் பெயரால் பதவிகளைத் தந்து சரிக் கட்டியிருக்கிறார் எம். ஜி. ஆர். முப்பதாண்டுகளுக்கு முந்திய மந்திரிச் செயலர்' பதவி என்ற ஒன்றைக் கண்டுபிடித்துத்தந்திரா விட்டால் இந்நேரம் மாநில மந்திரி சபை கவிழ்ந்திருக்கும் என்ற பேருண்மை 'ஆனந்த விகடனுக்கு புரியாமல் போனதேன்' அதிகாரிகள் வகிக்கும் பதவிகளை யெல்லாம் கூடக் கட்சிக்காரர்களுக்குத் தந்து மந்திரி அந்தஸ்து என அறிவிக்கப்படுகிறது.

சிலருக்கு வேறுவிதமாக (மறைமுக) உதவிகள் புரிவது நடைபெறுகின்றன.

வருமான வரி கட்டாதவர்கள் கூடத் திடீர்ப் பட முதலாளிகளாகி மூன்று மாதத்துக்குள்ளே படத்தை எடுத்து முடிப்பேன் என்று முழக்கமிடுகிறார்களே இது புனிதரின் மறைமுக உதவித் தூண்டுதலல்லவா?

தி. மு. க.வினரை அழிப்பதற்கென்றே சட்டம், நிதித்துறை அனைத்தையும் தவறாக பயன்படுத்துகிறதே அரசு; இது நிர்வாகச் சீர்கேடல்லவா? கழகத் தலைவர் கலைஞர் மற்றும் கழகத் தோழர்கள் மீதெல்லாம் பொய் வழக்குகள் போலி வழக்குகள் போடப்படுகின்றனவே இது ஊழலல்லவா?

'தகுதியுள்ளவர்களுக்கு வேலை' என்ற பெயரால் கப்யூனல் ஜி ஒவை மறைமுகமாக உடைத்தெறியப் பாடுபடும் எம். ஜி ஆரை 'ஆனந்த விகடன்' போன்றஏடுகள்விழுந்து விழுந்து ஆதரிப்பதில் நமக்கொன்றும் வியப்பில்லை என்றாலும் தற்போது நடைபெறும் போக்கில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பதவிகளிலெல்லாம் கூடக் கட்சிக்காரர்கள் நியமிக்கப்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை எனலாம். ★

சத்தியா புத்திரர்களின் சாராய சாம்ராஜ்யம்!

கள்ளச் சாராய சாம்ராஜ்யம்' நடத்தும் 'பெரிய மனிதர்களின் பட்டியலை இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வெளியிடப் போவதாக எம் ஜி. ஆர். கூறியிருப்பது அரசியல் 'ஸ்டண்ட்' தவிர வேறொன்றுமில்லை என்பது 'விவரம்' தெரிந்தவர்களுக்குப் புரியும்.

அதுமட்டுமல்ல—

கள்ளச் சாராய மன்னர்களாக இருந்த—இப்போது இருந்து வருகின்ற—'பெரிய புள்ளி'களின் பெயர்களும் தனக்குத் தெரியும் என்று கூறியுள்ளார் எம் ஜி. ஆர். இந்த உண்மையைக் கண்டுபிடிக்க எந்த 'ஜேம்ஸ் பாண்ட்டும்' தேவையில்லை

கள்ளச் சாராய 'நதிப் பெருக்கில்' யார் யார் ஓட்டம் விட்டு உல்லாச வாழ்க்கை நடத்தி வருகிறார்கள் என்பதுதான்' 'வெட்ட வெளிச்சமாக' நாட்டோருக்கெல்லாம் தெரிந்திருக்கிறதே ..

கள்ளச் சாராய மன்னர்கள் இன்னார்தான் என்று தெரிந்திருந்தும்—அவர்கள் கரங்களில் விலங்குமாட்டித் தெருவிலே இழுத்து வர இன்னாள்வரை எம் ஜி. ஆர். தயங்குவதன் மர்மம் என்னவோ?

எப்படியோ —

கள்ளச் சாராயப் பெருக்கிற்கு உறுதுணையாக இருப்பவர்கள் சில அதிகாரிகள் —

அந்தத் தொழிலில் தனிக்காட்டு 'இராஜாக்களாக' சில அ. தி. மு. க. அமைப்பாளர்களும் இருக்கிறார்கள் என்ற உண்மையை இப்போதாவது எம் ஜி ஆர். ஒப்புக்கொள்கிறாரே —

கள்ளச் சாராயம் காய்ச்சும் பெரிய மனிதர்களின் பட்டியலில் எம். ஜி. ஆருக்கு வேண்டிய ஒரு 'மாவீரரின் பெயரும் இடம் பெறுமா எனப் பலர் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால் —

ஒரு சந்தேகம் —

குற்றவாளிகள் என்று தெரிந்த பிறகு — அவருக்கு வேண்டிய காலைப் பத்திரிகையின் மொழியில் சொல்வதானால் 'லபக்' கென்று போய் பிடிக்க வேண்டியதுதானே...

"இதோ பிடிக்கப் போகிறேன்... இதோ பிடிக்கப் போகிறேன்...' என்று எதற்காக 'தண்டோரா' போடவேண்டும்?

ஒருவேளை —

"கள்ளச் சாராயப் பேர்வழிகளின் பெயர்களை வெளியிடப் போகிறேன்" என்று சொன்னவுடனேயே அவர்களெல்லாம் கள்ளச் சாராயம் காய்ச்சிக்கொண்டிருக்கும் பானைகளையெல்லாம் உடைத்துப்போட்டுவிட்டு ஓடிவிடுவார்கள் என்று நினைக்கிறாரா எம் ஜி. ஆர்.?

அல்லது —

'பிடிக்கப்போகிறேன்...புத்தி இருந்தால் 'சுதாரித்து'க் கொள் என்று முன்னறிவிப்பு விடுகிறாரா?

கடந்த 29—6—78 அன்று பட்டுக்கோட்டையில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட தன்மான இயக்கத் தளபதி அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அவர்களின் திருஉருவச்சிலை.

1938-ம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போராட்டத்தை யொட்டி, திருச்சியிலிருந்து சென்னைக்கு தமிழர் படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றபோது, அழகிரி தமது கையில், புலி கயல் பொறிக்கப்பட்ட தமிழர் கொடியை ஏந்திச் சென்ற காட்சியை நினைவூட்டும் வகையில் இந்த வெண்கலச் சிலையை சிற்பி எம். பி. இ பழனி வடித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24. சூரியநாராயண செட்டி தெரு. இராயபுரம். சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104.B அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009